Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 12 (07.12.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :68


மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)



## எதிரிமட்டும் அறிந்ததை எல்லோரும் அறியட்டும்!

### "விழுதாகி வேருமாகி" நூலுக்கு தலைவர் பிரபா செய்தி

எமது பெண் போராளிகளின் அபாரமான போராற்றலையும் அவர்களின் வீரத்தையும் எதிரியே நன்கறிவான். அவர்கள் அறிந்ததை உலகமும் எமது மக்களும் அறியுமுகமாக வரலாற்றுப்பதிவாக ஒரு நூல் எழுதப்பட வேண்டும் என்ற எனது பேரவாவை நிறைவு செய்யும் வகையில் "விழுதாகி வேருமாகி"என்ற நூல் வெளிவருவது பெரும் மகிழ்வைத் தருவதாக, தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மேற்படி நூலுக்கு வழங்கியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இந்தச் செய்தியில் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது.

எமது பெண்போராளிகளது அபாரமான போராற்றலையும் அவர்களது வீரத்தையும் எமது எதிரியே நன்கறிவான்.அவன் அறிந்ததை உலகமும், எமது மக்களும் அறியும் படியான வரலாற்றுப்பதிவாக ஒரு நூல் எழுதப் படவேண்டும். இதற்கு எமது போராட்டம் பற்றிய தெளிவான பார்வையும் போருக்குள் நின்ற வாழ்வனுபவமும் போர்க்கலை பற்றிய அறிவும் எமது போராளிகளது நுண்மையான மனவுணர்

(10 ஆம் பக்கம் பார்க்க)




# இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் இந்தியா பங்களிப்புச் செய்ய விரும்பினால் புலிகள் குறித்த அணுகுமுறை மாறவேண்டும்!

## லண்டன் மாவீரர் நாள் நிகழ்வில் அன்ரன் பாலசிங்கம்

(லண்டன் - எக்ஸெல் மண்டபத்திலிருந்து சிறப்புச் செய்தியாளர்)

**இந்தியாவைப் பகைத்துக்கொள்ள நாங்கள் விரும்பவில்லை. இந்தியாவை தொடர்ந்தும் நாங்கள் ஒரு நட்பு சக்தியாகவே - நேசசக்தியாகவே கருதிவருகின்றோம். இந்தியாவின் தேச நலன்களுக்கோ அல்லது பொருளாதார நலன்களுக்கோ பங்கம் செய்ய நாம் விரும்பவில்லை.**

**இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா பங்களிப்புச் செய்ய விரும்பினால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் வரவேண்டுமென லண்டனில் நேற்று நடந்த மாவீரர் நாள் நிகழ்வில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.**

லண்டனில் நேற்று மாலை சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இந்த மாவீரர் நாள் நிகழ்வில் - இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 1.15 மணியளவில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உரையாற்ற ஆரம்பித்தார். அந்தப் பேச்சின்போது அவர், தற்போதைய சமாதான முயற்சியில் இந்தியா குறிப்பிடத்தக்க அங்கம் வகிக்கவேண்டுமானால், புலிகளை அது ஓரங்கட்டிவிட முடியாது. ஏனெனில், புலிகள்தான் மக்கள். அவர்களை ஓரங்கட்டிவிட்டு, அவர்களை பயங்கரவாதிகளாக ஒதுக்கிவிட்டு - அவர்களை விரோத சக்தியாகப் பார்த்துக்கொண்டு, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா பங்களிப்புச் செய்யமுடியாது. அதுவே யதார்த்தம். இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா முக்கிய பங்குவகிக்கவேண்டுமாயின், புலிகள் தொடர்பான கொள்கையை மாற்றுவது குறித்து அது சிந்திக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு அரசாங்கத்துடன் - அதேவேளை பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய அரசாங்கத்துடனேயே புலிகள் பேச்சு நடத்தமுடியும். ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் இந்த இரண்டையும் கொண்

(10 ஆம் பக்கம பார்க்க)



## துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி திருமலையில் சிப்பாய் காயம்!

(திருகோணமலை)

திருகோணமலையில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று நண்பகல் 1.30 மணியளவில் மூதூர் 59 ஆம் மைல்கல் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது -

மூதூர்ப் பகுதியில் வீதிப் பாதுகாப்பில்

(10 ஆம் பக்கம பார்க்க)

## அரசியல் நெருக்கடியைத் தீர்க்கும்படி சர்வதேச சமூகம் உயர்மட்ட அழுத்தம்!

### ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே தற்போதுள்ள அரசியல் நெருக்கடியை உடனடியாகத் தீர்த்து சமாதான முயற்சியை முன்னெடுக்குமாறு சர்வதேசத்தின் உயர்மட்டங்களால் இரு தலைவர்களுக்கும் கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

2005 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் வரையாவது இரு கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம பார்க்க)

## தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு எட்டப்படும் என்கிறார் அமைச்சர் பீரிஸ்!

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் அடுத்த வாரம் நடைபெறும் பேச்சுக்களின் பின்னர் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு எட்டப்படும் என்ற நம்பிக்கை இருப்பதாக, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கோலாலம்பூரில் இடம்பெற்ற மலேசிய வழக்கறிஞர் மாநாட்டில் கலந்துகொண்டோரின் செய்தியாளர் மத்தியில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் விடுதலைப் புலிகளிடம் சரண்!

ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி அரசியற்துறை அலுவலகத்தில் சரணடைந்தார்.

யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி அலுவலகத்தில் இருந்து 'தினமுரசு' பத்திரிகை விற்பனை செயவதற்காக சென்ற ஐயம்பிள்ளை யோகராசா (வயது 33) என்பவரே சரணடைந்தவராவார்.

கடந்த மாதம் 10 ஆம் திகதி யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி அலுவலகத்திலிருந்து தலை மறைவான இவர், கடந்த வியாழன்று கிளிநொச்சிக்கு சென்று விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார். அங்கு அவர் பத்திரிகையாளர் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

இதேவேளை, சரணடைந்த உறுப்பினர் யோகராசா, வைத்தியசாலைக்குச் சென்ற வேளை காணாமற்போனதாகவும், இவரை விடுதலைப் புலிகளே கடத்திச் சென்றதாகவும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்ட அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளார்.

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1845)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# எல்லைப்படை வீரர்கள் நினைவாக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி!

(யாழ்ப்பாணம்)

எல்லைப்படை வீரர்கள் ஞாபகார்த்தமாக, தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளின் இரண்டாம் சுற்று காலிறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் - மாலை 3 மணிக்கு நடைபெறும் இப் போட்டியில், யாழ்.சென் றோக்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இன்று நடைபெறும் காட்சிப் போட்டியில் - வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அணிகளான விநாயகர் விளையாட்டுக்கழகம், ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் ஆகியன மோதவுள்ளன.

இச்சுற்றுப் போட்டிகளின் அரையிறுதி, இறுதிப் போட்டிகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 12,13,14ஆம் திகதிகளில் மின்னொளியில் நடைபெறவுள்ளன. இதன்போது, மட்டக்களப்பு மாவட்ட தெரிவு அணி காட்சிப் போட்டிகளில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



'விழுதாகி வேருமாகி' நூல் அறிமுகவிழாவில், முதல் பிரதியை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி, மேஜர் பரதனின் தாயார் அன்னம்மாவிடம் வழங்குவதைக் காணலாம்.



'விழுதாகி வேருமாகி' நூல் அறிமுகவிழா நிகழ்வில், தேசியக் கொடியினை மாலதி படையணியின் தளபதி தமிழ்ச்செல்வி ஏற்றிவைப்பதைக் காணலாம்.


## நல்லூர் பிரதேச சபை கேள்வி அறிவித்தல் 2004

01.01.2004 ஆம் திகதி முதல் 31.12.2004 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| சந்தைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. திருநெல்வேலிச் சந்தை, துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | 1000.00 | 15,000.00 | 38,72,700.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை, துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | 500.00 | 5,000.00 | 1,75,509.00 |
| 2. கோண்டாவில் வடக்கு அரசடி வீதி மீன் சந்தை | 100.00 | 500.00 | 1,115.00 |

- ❋ கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி 15.12.2003 திங்கள் 12.00 மணிவரை
- ❋ கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 16.12.2003 செவ்வாய் 10.00 மணிவரை
- ❋ கேள்விப் பத்திரம் திறக்கும் திகதி 16.12.2003 செவ்வாய் 2.00 மணிவரை

மேலதிக விபரங்களை நல்லூர், கொக்குவில் பிரதேசசபை உப அலுவலகங்களிலும் பிரதேசசபை தலைமைச் செயலகத்திலும் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி,
05.12.2003

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர் நல்லூர் பிரதேச சபை

(சி/1868)

## நத்தார், புதுவருட விசேட சலுகை

விழியின் மீது விழிப்பாயிருங்கள்

- சிறிய எழுத்துக்கள் எழுதப் படிக்கச் சிரமப்படுகின்றீர்களா?
- ஒருவிதமான தலைவலியினால் அவதிப்படுகின்றீர்களா?

அப்படியாயின் நிச்சயம் கண் குறைபாடுதான் காரணம்
(பாடசாலை மாணவருக்கு விசேட சலுகை உண்டு)
எம்மிடம் வாருங்கள்! இலவச கண் பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும். அத்துடன்

- முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்
- மிதப்பு பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

மூக்குக் கண்ணாடியகமும், பல் கட்டுமிடமும்
564,566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 222 - 2486
கிளைகள்
80, K.K.S வீதி, சுன்னாகம். 91, K.K.S வீதி, கொக்குவில்.
(சி-1871)

## பணிநிலை வெற்றிடம்

நிதித்துறையின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன

| பணிநிலைகள் | | தகைமைகள் |
|---|---|---|
| 01. கணக்காளர்<br>02. கணக்காய்வாளர்<br>03. மேலாளர் | தகைமைகள்: | 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமானி அல்லது தொழில் நிர்வாகமானி அல்லது பொருளியல் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>2. உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பூர்த்தி செய்திருக்க வேண்டும். |
| 04. மேலாளர் - கணினி | தகைமைகள்: | 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணினித்துறையில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>2. அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தின் கணினிச் சான்றுடன் கணினித்துறையில் ஈராண்டுப் பட்டறிவு இருத்தல் வேண்டும். |
| 05. அலுவலர்<br>06. கணக்குப்பதிவாளர்<br>07. எழுதுநர் | தகைமைகள்: | 1. க.பொ.த (உயர்தர) இல் பொருத்தமான பிரிவில் 3 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 08. கணினித்தரவு பதியுநர் | தகைமைகள்: | 1. க.பொ.த (உயர்தர) இல் சித்தியடைந்திருப்பதுடன் எம்.எஸ்.ஒபிஸ் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| 09. அலுவலக உதவியாளர் | தகைமைகள்: | 1. க.பொ.த (சாதாரண) இல் தமிழ்,கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். |

நேர்முகத்தேர்வு இடம்: வருவாய்ப்பகுதிச் செயலகம் யாழ்ப்பாணம்.
(கைலாயபிள்ளையார் கோயில் அருகாமை)

| காலம் : | | | பணிநிலைகள் |
|---|---|---|---|
| 11.12.2003 | வியாழன் | காலை 10மணி | 01 02 03 04 |
| 12.12.2003 | வெள்ளி | காலை 10மணி | 05 06 07 08 09 |

பொருத்தமான விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தன்வரலாறு (சுயவிபரம்), சான்றிதழ்களுடன் சமூகம் தரவும்.

குறிப்பு : நேர்முகத்தேர்வின் முன்னர் விண்ணப்பதாரிகள் அனைவருக்குமான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு நடைபெறும்.

நிதித்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்

07.12.2003


## ஐ.சி.ஆர்.சி அன்பளிப்பு

மலக்கழிவுகளை அகற்றும் இயந்திரமொன்றை ஐ.சி.ஆர்.சி யாழ். மாநகரசபைக்கு வழங்கியுள்ளது. இந்த இயந்திரம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. இதனை மாநகரசபை ஆணையாளர் சார்பில், மாநகரசபைச் செயலாளர் வே.குலநாயகம் பெற்றுக்கொண்டார்.

மாநகரசபையின் வசம் முன்னர் இருந்த இயந்திரம் பழுதடைந்திருந்தது. இதனால், மலக்கழிவுகளை அகற்றும் பணிகள் பாதிப்படைந்திருந்தன. இது தொடர்பாக யாழ். மாநகரசபை ஆணையாளர் ஐ.சி.ஆர்.சிக்கு தெரியப்படுத்தியதையடுத்தே, இது அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், தமது மலசலகூடக் கழிவுகளை அகற்றவிரும்புவோர் யாழ்.மாநகரசபையுடன் தொடர்பு கொள்ளமுடியும். (ச)


## அன்பளிப்பு

10 மில்க்வைற் மேலுறைகளைக் கொடுத்து யோகாசனப் படங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

மில்க்வைற்
த.பெ. இல 77
யாழ்ப்பாணம்
(சி-1872)

## ராஜா யாழ்ப்பாணம்.

8 ஆம் திகதி வரை
சிலம்பரசன், ஷெர்மி நடித்த
காதல் அழிவதில்லை
காட்சிநேரம் :10.30, 2.30, 6.30 (பு.நே)
2 FAST 2 FURIOUS
இரவு 9.30 மட்டும்
9 ஆம் திகதி முதல்
எனக்கு 20 உனக்கு 18
(சி-1847)

## நிரஞ்சனாஸ் சங்கானை

விஜய், ஜோதிகா நடித்த
திருமலை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
CATCH ME IF YOU CAN
(சி-1846)

## 16 இலங்கையர்கள் விரைவில் விடுதலை

மாலைதீவில் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 16 இலங்கையர்கள் விரைவில் விடுவிக்கப்படவுள்ளனர்.

மாலைதீவு கடற்பகுதியில் மீன்பிடித்தது முதலான குற்றச்சாட்டுக்கள் பேரில் கைதான 16 இலங்கையரே விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்ன கயூமின் உத்தரவுக்கு இணங்கியே, இந்த 16 இலங்கையரும் விடுவிக்கப்படவுள்ளனர்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரோன்பெர்னாணடோ மாலைதீவு சென்று அங்கு நடத்திய பேச்சுக்களின் பின்னரே இவர்களை விடுவிக்க இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புலமைப்பரிசில் பரீட்சை இன்று நடைபெறும்

இன்று நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று லட்சத்து 10 ஆயிரத்து தொள்ளாயிரத்து 49 பேர் தோற்றவுள்ளனர்.

ஆயிரத்து ஐந்நூற்று அறுபது பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெற உள்ளதாகவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இலங்கை - இந்திய திட்ட உபாய மாநாட்டில் புலிகளுக்கு எதிரான கருத்துக்களே அதிகம்!

## அரசியல் அவதானிகள் தெரிவிப்பு

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை - இந்திய திட்ட உபாய மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களே முனைப்புப்பெற்றிருந்ததாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் சட்டவிரோதமான கடற்படையொன்று உருவாவதை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்ற தொனியில் கடற்புலிகளுக்கு எதிரான கருத்துக்களை - இந்தியாவின் முன்னாள் கடற்படையின் கட்டளைத் தளபதி வைஸ் அட்மிரல் தாஸ் மற்றும் இந்திய முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் ராஜ்கோத்ரா ஆகியோர் தமது உரையில் குறிப்பிட்டதை அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டினர்.

அதேவேளை, இலங்கைக்குள் இரண்டு கடற்படைகள் இருக்கக் கூடாதென, இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளமை குறித்தும் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இலங்கையின் சமாதான முயற்சிகளும், தென்னிலங்கை அரசியல் நெருக்கடிகளும் விடுதலைப் புலிகளை பலப்படுத்தியிருப்பதாக - இந்திய தேசிய பாதுகாப்புத்துறை ஆணையகத்தின் முன்னாள் உறுப்பினரும், பேராசிரியருமான முனி தனது உரையில் தெரிவித்திருந்தார்.

அத்துடன், இலங்கை மக்களின் தேவைக்கேற்ப இராணுவ ரீதியிலான ஒத்துழைப்புக்களை வழங்க இந்தியா தயாராக உள்ளதாக- இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் ராஜ்கோத்ரா தனதுரையில் குறிப்பிட்டிருந்தார்.

திருகோணமலைத் துறைமுகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதால் அத்துறைமுகம் சார்ந்த விடயத்தில் இலங்கையும், இந்தியாவும் கூட்டாகச் செயற்படவேண்டும் என்ற கருத்துக்களும் இந்த மாநாட்டில் முன்வைக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் முன்வைத்த வடக்கு, கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கமுடியுமென- இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில், இந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளமுடியாதென இந்தியத்தரப்பால் இந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சர்வதேசரீதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், இலங்கையின் தலைநகரான கொழும்பில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்கள் இந்தியத் தரப்பால் முன்வைக்கப்பட்டது குறித்தே அரசியல் அவதானிகள் விசனம் தெரிவித்தனர்.

# சுங்க அதிகாரிகளின் போராட்டத்தால் கொழும்பு துறைமுகப் பணிகள் பாதிப்பு

சுங்க அதிகாரிகள் மேற்கொண்டுவரும் போராட்டத்தினால் கொழும்புத்துறைமுகத்தின் இறக்குமதித்துறைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சுங்க அதிகாரிகள் நேற்றுமுன்தினம் முதல் மேற்கொண்டுவரும் பணிநிறுத்தப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சுங்க அதிகாரிகள் தவிர்ந்த ஏனையோரே சட்டப்படி வேலை என்கின்ற இயக்கத்தில் இணைந்துள்ளனர்.

அமைச்சரவையில் வருமான அதிகாரசபைச் சட்டம் அங்கீகரிக்கப்படுவதற்காக சமர்ப்பிக்கப் பட்டதையடுத்தே அதனை ஆட்சேபித்து இந்த சட்டப்படி வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் கொழும்புத்துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் உணவுப்பொருட்கள் பாதிக்கப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறக்கப்படவேண்டிய பெருமளவிலான கொள்கலன்கள் இறக்கப்படாமலுள்ளன. இதனால் உணவுப்பொருட்கள் சேதமடையலாம் என, வர்த்தகக் களஞ்சிய ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தற்போது விமானநிலையத்திலுள்ள சுங்க அதிகாரிகள் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொள்ளவில்லை.

இதேவேளை, நிதியமைச்சர் சொக்ஸி தம்முடன் பேச்சுவார்த்தை நடத்தும்வரை இந்தப் போராட்டம் தொடருமென, சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

வருமான அதிகார சட்டம் கொண்டுவரப் பட்டால் சுங்க அதிகார சபையிலுள்ள சுமார் 4500 பேருக்கு வேலையில்லாமல் போகலாம் என்றே சுங்க அதிகாரிகள் அஞ்சுகிறார்கள் என்றும் கூறப்படுகின்றது.

# குடாநாட்டில் இயல்புவாழ்க்கை திரும்பும்வரை தமிழர்களைத் திருப்பி அனுப்பவேண்டாம்!

## வெளிநாடுகளிடம் புனர்வாழ்வுக்கிளை கோரிக்கை

யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு அப்பகுதிகளில் மக்களின் இயல்புவாழ்க்கை திரும்பும்வரை - இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தஞ்சம்புகுந்துள்ள தமிழ்மக்களை தமிழர் தாயகத்திற்கு திருப்பியனுப்பவேண்டாம் என, யாழ்ப்பாண அரச செயலகத்தில் இயங்கும் புனர்வாழ்வுக் கிளை அலுவலகம் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் கேட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் மக்கள் மீளக்குடியேறுவதற்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களும், இராணுவ நெருக்குவாரங்களும் பெரும் தடையாகவுள்ளன. இத்தகைய நெருக்குவாரங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து யாழ். குடாநாட்டு நிலைமைகளைப் பார்வையிடவரும் வெளிநாட்டவர்கள் - இங்கு நிலைமை சுமுகமாக இருப்பதாகவும், புலம்பெயர்ந்துள்ளவர்களை இங்கு திருப்பியனுப்பலாம் எனவும் கூறி வருகின்றனர். எனினும் நிலைமை அவ்வாறில்லை.

எனவே வெளிநாடுகளில் தஞ்சம்புகுந்துள்ள இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை அமுல்செய்ய வேண்டாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியுடனான அரசியல் முறுகல்நிலை விரைவில் தீர்க்கப்படும் என்கிறார் பிரதமர்!



ஜனாதிபதியுடன் ஏற்பட்டுள்ள முறுகல்நிலை விரைவில் தீர்க்கப்படுமென்று பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

இதன்பின்னர் முடக்கநிலை அடைந்திருக்கும் சமாதான முயற்சிகள் மீண்டும் உத்வேகம்பெறும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

புத்தளம் பகுதிக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கும், தனக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை திருப்தியைத் தருவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியுடனான அடுத்த சந்திப்பில் அரசியல் நெருக்கடி தீர்க்கப் படும் என்று தான் எதிர்பார்ப்பதாக பிரதமர் அங்கு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஒன்றரை இலட்சம் மக்கள் மீளக்குடியேறமுடியாமல் நிர்க்கதிநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மூன்று உயர்பாதுகாப்பு வலயங்கள் நிறுவப்பட்டிருப்பதே இதற்கான காரணமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களிற்கு ஏற்ப உயர் பாதுகாப்பு வலயங்களைப் படிப்படியாக அகற்றி - மக்களை மீளக்குடியேறச்செய்ய, நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

சமாதான சூழல் காரணமாக 12 ஆயிரம் முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். கிண்ணியாவில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற தன்மை ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னரே நிகழ்ந்துள்ளது எனத் தெரிவித்த பிரதமர், இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார்

# தோட்ட தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்ட நடைமுறை!

## லக்ஷ்மன் கிரியல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கென ஓய்வூதியத் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்திவருவதாக - பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பாக திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும், தோட்டத்தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது சம்பந்தமான ஆரம்பகட்ட நடவடிக்கைககள் அடுத்த வருடம் நிறைவுபெறும் எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல நம்பிக்கை தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறை அமைச்சுக்கான நிதிஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே - அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் - தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புக்கள், சுகாதார மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை -

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள ஆயிரத்து 250 ரூபா சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்று - பொ.ஜ.ஐ முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

## சுங்கத்துறையினர் வேலைநிறுத்தம் 240 மில்லியன் ரூபா நஷ்டம்

சுங்கத்துறையினர் நடாத்திவரும் சட்டப்படியான வேலைநிறுத்தத்தின் காரணமாக கடந்த இரண்டு நாட்களில் மட்டும் 240 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

தேசிய வருமான வரித் திட்டம் தங்களுடன் ஆலோசிக்காமல் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதை ஆட்சேபித்தே இந்தப் போராட்டத்தை சுங்க அதிகாரிகள் நடாத்திவருகின்றனர். சுங்கத்துறையின் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்களைத் தவிர ஏனையோர் இந்தச் சட்டப்படி வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளார்கள். இந்தப்போராட்டத்தில் விமானநிலைய சுங்க அதிகாரிகள் இணைந்துகொள்ளவில்லை துறைமுக சுங்க அதிகாரிகள் இணைந்துள்ளனர். இதன் காரணத்தினால் இறக்குமதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. கொழும்பிலுள்ள இறக்குமதியை நம்பி இருக்கும் சில கடைகள் மூடப்பட்டுள்ளன. தொடர்ந்து சுங்க அதிகாரிகளின் போராட்டம் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவுபவர்களை அமெரிக்கச் சட்டத்தின் கீழ் தண்டிக்க முடியாது!

## அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

விடுதலைப்புலிகளுக்கு சட்டம் போன்ற துறைகளில் உதவிகளை வழங்கிவருபவர்களை அமெரிக்க தேசவழமைச்சட்டதின் கீழ் தண்டிக்கக்கூடாது என, லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளிததுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிய அமைப்புக்கள் மற்றும் மருத்துவர்கள் ஆகியோரை குற்றவாளிகளாக கைதுசெய்ய முற்பட்டபோது ஏற்பட்ட வழக்கு விசாரணைகளின்போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பில் - சந்தேகத்திற்கு இடமற்றமுறையில் குறிப்பிட்ட இயக்கம் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என நிரூபிக்கப்படும்வரைக்கும் அந்த இயக்கத்திற்கு உதவிபுரிபவர்களை தண்டிக்கமுடியாது.

விடுதலைப்புலிகள் அவர்களது கட்டுப்பாட்டு பகுதிகளில் மேற்கொண்டுவரும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு சுகாதாரம், சட்டம் போன்ற துறைகளில் சிறப்புத் தேர்ச்சியுள்ளவர்கள் ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வருகிறார்கள்.

சிலர் பொருளாதார ரீதியாகவும் புலிகளுக்கு உதவி வருகிறார்கள். இவர்கள் அனைவரையும் விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என்பதை உறுதியாக நிரூபிக்கப்படும் வரைக்கும் - அமெரிக்க தேசவழமைச் சட்டம்மூலம் தண்டிக்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு வருடங்களுக்கு முன்னர், செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவில் நடந்த உலக வர்த்தக மையம் மீதான தாக்குதலின் எதிரொலியாகவே, அமெரிக்க தேசவழமைச் சட்டம் உருவாக்கப்பட்டது. இதன்படி அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றுக்கு பொருளதார ரீதியில் உதவுவதும், பயிற்சிகளை அளிப்பதும் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

இந்தச் சட்டத்தை எதிர்த்து - அரசியல் சட்ட உரிமைகளுக்கான மையத்தில் வழக்கறிஞர் டேவிட் கோல் அமெரிக்க மேன்முறையிட்டு நீதிமன்றத்தில் வாதிட்டிருந்தார். இவரது வாதத்தின் பின்னரேயே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஓய்வூதிய கணிப்பீடு பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலகத்தில் இன்று முதல் எதிர்வரும் 8 ஆம் திகதிவரை நடாத்த ஒழுங்குசெய்யப்பட்டுள்ள ஓய்வூதிய கணிப்பீட்டு பயிற்சிப்பட்டறையில் பிரதேசசபை, நகரசபை அலுவலர்களையும் சேர்த்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் கலந்து கொள்ள ஒருவரது பெயரைச் சிபார்சு செய்து பிரதேசசபை, நகரசபைச் செயலாளர்கள் - செயலகக் கணக்காளரிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதன்படி ஓய்வூதியக்கொடுப்பனவு சம்பந்தமான பயிற்சிப்பட்டறை பிரதேச செயலக அலுவலர்களுக்கு மட்டுமே நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



மக்கள் வங்கியின் நகை அடகு பிடிக்கும் சேவை ஆரம்பிக்கும் முகமாக - யாழ்.பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கி கிளையில் நடைபெற்ற நிகழ்வில், மக்கள் வங்கி பிரதிப் பொதுமுகாமையாளர் ஏ.வி.பத்திரன மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

### வடமராட்சி இன்பருட்டியிலுள்ள

# இறங்குதுறையை படையினர் ஆழமாக்குவது அவர்களின் பிரசார நடவடிக்கையாகும்

## கண்டிக்கிறது வடமராட்சி வடக்கு மீனவர்சங்க சமாசம்

வடமராட்சி வடக்கிலுள்ள -இன்பருட்டி இறங்குதுறையை, படையினர் ஆழப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையானது, அவர்களின் பிரசார நடவடிக்கைளுக்காகவே என, வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்களின் சமாசம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் மேலும் தெரிவிக்கையில் - மீனவர்களின் நலனில் அக்கறையுள்ளதாகப் படையினர் காட்டுவதற்காகவே, இந்தத் துறைமுகத்தினை மட்டும் புனரமைக்கிறார்கள். மீனவர்களின் நலனில் உண்மையான அக்கறை படையினருக்கு உண்டெனில், இந்தப் பகுதிகளிலுள்ள மிகுதி 24 இறங்குதுறைகளையும் அவர்கள் புனரமைக்கவேண்டும்.

இன்பருட்டி இறங்குதுறையை ஆழமாக்க, அந்தப்பகுதி மீனவசங்கப் பிரதிநிதிகள் விடுத்தகோரிக்கையைப் படையினர் இதுவரைகாலமும் நிராகரித்தனர்.

இதன்பின்னர், கடந்த புதன்கிழமை கூடிய மீனவசங்கங்கள் தமது எதிர்ப்பைக்காட்டும் முகமாக அன்றையதினம் பகிஷ்கரிப்பு நடவடிக் கையில் ஈடுபட்டிருந்தனர். இதனையடுத்து, கடந்த வியாழக்கிழமை அந்தப் பகுதிக்கு நேரில் விஜயம்செய்த 524 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி - கேணல் டி. இரத்னா யக்கா, இந்த விடயம் தொடர்பாக மீனவசங்கப் பிரதிநிதிகளுடன் கலந் துரையாடல் ஒன்றை நடத்தியிருந் தார்.

இதன்பின்னர் நேற்று முன்தினம் சுமார் இருபதிற்கும் மேற்பட்ட படையினருடன் சென்ற, குறித்த இராணுவ அதிகாரி மீன்பிடி இறங்குதுறையை ஆழமாக்கும் பணியை மேற்கொண்டார். இதன்போது கண்காணிப்புக் குழுவினரும் அங்கிருந்தனர்.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர், விடியோபடம் எடுத்ததுடன், ஒளிப்படமும் எடுத்துள்ளனர். அத்துடன், அடுத்த இரண்டு வாரத்திற்குள் இறங்குதுறையை புனரமைத்துத் தருவதெனவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக, வடமராட்சி வடக்கு மீனவசங்கப் பிரதிநிதிகள் கண்டனம் தெரிவித்ததோடு - இது படையினரின் பிரச்சார நடவடிக்கை எனவும் தெரிவித்துள்ளனர். (202)

# ஆங்கிலபாட ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வலிகாம வலயத்தில் - ஆங்கிலபாட ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரி ஆசிரியர் அல்லது பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரி விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு, அதற்கமைய விண்ணபிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை - எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன் உரியமுறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# போரின்போதும் கலைப்பணிகள் ஆற்றிய கலாமன்றம் பாராட்டப்பட வேண்டியது

## தமிழ்த்துறைத் தலைவர் சிவலிங்கராஜா

(யாழ்ப்பாணம்)

போர் இடம்பெற்ற காலகட்டத்திலும் - கலைப்பணி, இறைபணி மூலம் சமாதானத்திற்காக கலைஞர்கள்மூலம் குரல் கொடுத்த திருமறைக் கலாமன்றத்தின் பணிகள் பாராட்டப்பட வேண்டியவை எனத் தெரிவித்தார் - யாழ்.பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா.

திருமறைக்கலாமன்றத்தின் 38 ஆவது ஆண்டு நிறைவு விழாவில், பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழர்களின் பாரம்பரிய கலைவடிவங்களை - இலங்கையில் மட்டுமன்றி, கடல் கடந்த நாடுகளிலும் கட்டிக்காப்பதில் திருமறைக்கலாமன்றம் சிறப்பாகச் செயற்படுகின்றது. இன்னும் சிலவருடங்களில் இல்லாது போகக்கூடிய கூத்து வடிவங்களை, நவீனத்துவத்துக்கு ஏற்ற வகையில் மாற்றியமைத்து, மேடையேற்றுவது சிறப்பான ஒரு அம்சமாகும். சினிமா கலாசாரத்தில் இன்றைய நிகழ்வுக்கு இவ்வளவு தொகையானோர் சமூகமளித்திருப்பது வரவேற்கப்படவேண்டியது.

இன்று வீடுகள் பல சின்னத்திரைகளாக மாற்றம் பெறுகின்றன. இந்தநிலை ஆரோக்கியமானதல்ல எனவும் அவர் தெரிவித்தார். இந்த நிகழ்வில் கூத்துப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (111)

# சின்னஞ்சிறு செய்திகள்

### ஒன்றுகூடல் நிகழ்வு

'நான்' உளவியல் சஞ்சிகையின் எழுத்தாளர்கள், வாசகர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வும், கருத்தமர்வும் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தொடர்பகத்தில், இன்று இடம்பெறவுள்ளது. கருத்தமர்வில் கருத்துரைகளை - அருட்தந்தை றெஜினோட்ல, ஜோசப் பாலா ஆகியோர் வழங்கவுள்ளனர். (91)

### வள ஆளணி கருத்தரங்கு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் - நாளை திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில், வள ஆளணியினருக்கான கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் - யாழ்.மாவட்ட வலயங்களிலுள்ள நிர்வாகசபைத் தலைவர், பொருளாளர், தாய்ச்சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### குற்றப்பணம் அறவீடு

(வடமராட்சி)

தமது சங்கத்தின் விடுமுறை நாட்களில் கடை திறந்தமைக்காகவும், கட்டணம் குறைவாக அறவிட்டமைக்காகவும் அங்கத்தவர் ஒருவர் மீது 2 ஆயிரம் ரூபா குற்றப்பணமாக அறவிடப்பட்டுள்ளதாக - சிகை ஒப்பனையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

### விண்ணப்பம் கோரல்

(வேலணை)

தீவக கல்வி வலயத்தில் - தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்கு, இலங்கை ஆசிரியர் தரம் 2 II, 2 I, I ஐச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர், தமது விண்ணப்பங்களைத் தீவக வலயக்கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தீவக வலயத்தில் - சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தில் ஏற்பட்டுள்ள பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு, தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இலங்கை அதிபர் சேவை தரத்தை சேர்ந்தவர்களும், ஆசிரியர் தரம் 2 I, 1 ஐச் சேர்ந்தவர்களும், எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைத் தீவக வலயக்கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிபபாளர கேட்டுக்கொண்டுள்ளார்.

### காவலரண்களைப் பலப்படுத்த தென்னைகள் தறிப்பு

மிருசுவில் படையினர் தமது காவலரண்களைப் பலப்படுத்துவதற்காக, நேற்றைய தினம் 30 இற்கும் அதிகமான பனைகளையும், 10 இற்கும் அதிகமான தென்னைகளையும் தறித்துள்ளனர்.

கண்டி வீதியோரமாக பொது மக்களின் காணிகளில் நின்ற மரங்களே இவ்வாறு தறிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அண்மையில் படையினரால் சில பகுதிகளில் பனைவிதைகள் மீள் நடுகை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (111)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்

பெயர் : க.டிலக்ஸ்நவி
முகவரி : மீசாலை மேற்கு, மீசாலை.



நான்காவது அகவையில்



பெயர் : ம.ஜனகன்
முகவரி : நாவற்காடு, அச்சுவேலி.

ஆறாவது அகவையில்

பெயர் : அ.சசிப்பிரியா
முகவரி : சின்னாலடி, காரைநகர்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:---------------
முகவரி :---------------
பிறந்த ஆண்டு:---------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------
பெற்றோர் ஒப்பம்




# ஒரு மனிதனைச் சந்தித்தோம்



ஆளுமையின் மறுவடிவம்

அதேகாலப்பகுதியில், 1956 இல் அவுஸ்திரேலிய - மெல்பேர்ண் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட எதிர்வீரசிங்கம் ஐயா - அந்தப் போட்டிகளில் 6 அடி 6 3/4 அங்குலங்கள் (2 மீற்றர்) பூர்த்திசெய்து, ஒலிம்பிக்கில் பதினாறாவது இடத்தைப் பெற்றுக்கொள்கிறார். உரையாடலின் ஊடே அவரின் மறக்கமுடியாத பதிவுகளில் இன்னொன்றை மிக உணர்வு பூர்வமாகத் தொட்டுச் சென்றார். 1958 ரோக்கியோ ஆசியப்போட்டிகளில், உயரம் பாய்தலில் இவர் தங்கம் வென்றது. மே மாதம் 24 ஆம் திகதி. அடுத்ததினம் மே 25 ஆம் திகதி இலங்கையில் 1958 ஆம் ஆண்டில் இனக் கலவரம் வெடிக்கிறது. இலங்கையை எல்லோரும் ஆர்வத்துடன் உலகப் படத்தில் தேடச்செய்கிறார் எதிர்வீரசிங்கம் ஐயா. ஆனால், அதற்குப் பரிசு தமிழ்மக்கள் மீதான வன்முறைதானா என்பது போல எங்களைப் பார்க்கிறார் அவர்.

ஐக்கிய அமெரிக்காவில் **B.Sc (Agriculture Management)** பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட இவர், 1961 இல் இலங்கை திரும்பியதும் இவருக்கு இங்கு 'வேலை இல்லை' என்ற நிலைமை இன்னும் வேடிக்கையாக ஓர்பதிவாகக் காணப்படுகிறது. ஏறத்தாள எட்டுமாதம்வேலை இல்லாதோர் பட்டியலில் இருந்த இவருக்கு, பிரிட்டிஷ் கவுன்சில் வேலை கொடுத்தது. இந்தக் காலகட்டத்தைத் தொடர்ந்து, 1962 இல் இந்தோனேசியாவின் ஜகார்த்தா தலைநகரில் நடைபெறவிருந்த ஆசியப் போட்டிகளுக்கு, இவர் இயல்பாகவே தெரிவாகியிருப்பார் என்றால் ஏமாற்றமுறுவீர்கள். இவர் இந்த ஆசியப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படவில்லை.

ஜகார்த்தா ஆசியப் போட்டிகளுக்குத் தகுதிநிலை உயரம்பாய்தலில் 6 அடி 4 அங்குல்களாக இருந்தது. ஆனால், இவர் 6 அடி 6 அங்குலங்கள் உயரம் பாய்ந்து கொண்டிருந்த நேரம் அது. ஆனால், கதவுகள் மூடப்படுகின்றன. இந்தநிலையில், மீண்டும் கார்ல்ரன் சென்விரத்னவின் பேனா ஆவேசம் கொண்டு எழுதித் தள்ளுகிறது. அதனால் எதிர்வீரசிங்கம் ஐயாவின் தெரிவை யாராலும் தடுக்க முடியவில்லை. அவர் ஆசியப் போட்டிக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார். அதே காலப்பகுதியில் போட்டிகளுக்குப் பத்து நாட்கள் முன்னதாக அமெரிக்காவில் சகோதரனை விமானவிபத்தொன்றில் இழந்தநிலையில் ,மிகவும் மனம்குழம்பிய நிலையில் பங்குகொண்டு வெள்ளிப் பதக்கத்துக்கு உரியவராகிறார்.

இங்கு இன்னொரு சம்பவத்தை எதிர்வீரசிங்கம் ஐயா நினைவு கூருகிறார். 1958 இல் தான் ரோக்கியோவில் உய்ரம் பாய்ந்தபோது, தன்னைப் பார்த்து அந்தப் பாணியைப் பின்பற்றிய ஜப்பானிய வீரன் தான், இப்போது ஜகார்த்தாவில் தன்னைத் தோற்கடித்த வீரன் என்று, அந்த வீரனின் பயிற்சியாளர் - எதிர்வீரசிங்கம் ஐயாவிடம் வந்து கூறினாராம் 'ஜப்பானிய வீரர் பூர்த்தி செய்த உயரம் 6 அடி 9 அங்குலம்'.

இதைக் கூறிய ஐயா, தான் இந்த வருடம் (2003) ஒரு தடவை இன்ரநெட்டில் விளையாட்டுத்துறைச் செய்திகளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, இலங்கையில் மொரவக்க என்ற இடத்தைச் சேர்ந்த மஞ்சுளகுமார விஜயசேகர சென்ற பள்ளி மாணவன் 6 அடி 10 அங்குலத்தைக் கடந்தது, தன்மனதில் பதிந்தது என்கிறார். பதினேழு வயதில் 6 அடி 10 அங்குலங்கள் கடக்க இயலுமாயின், மஞ்சுளகுமார - அதீததிறமை பெற்றவனாகத்தான் இருக்கவேண்டும் என்றும், இவனை ஆசியத் தங்கப்பதக்கம் வெல்ல வைக்க இயலும் என்றும் தீர்மானித்திருக்கிறார். இதன் பின்னணியில், இந்த இளைஞனுக்கு அமெரிக்கப் புலமைப்பரிசில் வழிகாட்டிய ஆசானாகத் திகழ்கிறார் எதிர்வீரசிங்கம் ஐயா. அதுமட்டுமல்ல, பத்து மாதகாலப் பயிற்சிக்காலத்தில் இருப்பிட வசதியையும் அமெரிக்காவில் தனது இல்லத்திலேயே ஏற்படுத்திக் கொடுத்தும், மேலும் பல வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார். அமெரிக்கப் பயிற்சியின்பின், தற்போது அந்த இளைஞன் 7 அடி 2 அங்குலங்கள் கடந்து பாய்ந்து கொண்டிருப்பதாகவும் சந்தோஷப்படுகிறார் எதிர்வீரசிங்கம் ஐயா.

விளையாட்டுத்துறை - கல்வியைக் கெடுத்துவிடும் என்ற எண்ணம் யாருக்காவது இருந்தால், அவர்கள் எதிர்வீரசிங்கம் ஐயாவைச் சந்தித்து உரையாடட்டும். 1961 இல் முதல் பட்டம் பெற்ற இவர், 1963 இல் அமெரிக்காவில் இன்னொரு பட்டம் பெறுகின்றார். அது **M.A. in Education , Teacher Training in Agriculture** என்ற துறைசார்ந்தது என்கிறார்.



இந்தப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டு இலங்கை வந்தவர் - 1965 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வேலை வாய்ப்பைப் பெற முனைந்தாலும், அது நிறைவேறவில்லை. இவருக்கு மீண்டும் கார்ல்ரன் செனவிரத்ன உதவிபுரிய முன்வந்தமையை நினைவு கூருகிறார். இந்த நிலையில் ஆபிரிக்காவின் சியராலியோன் நாட்டில் **University of Sierra Leone** இல் விரிவுரையாளராக இணைந்துகொள்கிறார். அங்கு கடமையாற்றும்போது, சக விரிவுரையாளராக கடமையாற்றிய அமெரிக்கப் பெண்மணியைத் தன் வாழ்க்கைத் துணையாகக்கொள்கிறார். வாழ்க்கையும் தொடர்கிறது, கல்வியும் தொடர்கிறது. 1968 இல் நியூயோர்க் கோர்னல் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொள்கிறார்.

இந்தப் பட்டமானது **Social Science ED.Phychology, Agriculture Education** என்பவற்றை உள்ளடக்கிய **P.hD (AG.ED)** என்னும் பட்டமாகும். ஆனால், துர்திஷ்டவசமாக இலங்கை இவரை எட்டித்தள்ளிக்கொண்டே இருக்க, மீண்டும் சியராலியோன் செல்கிறார். 1971 - 1977 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அங்கு கடமையாற்றிவிட்டு, மீண்டும் இலங்கை வந்தவர் யாழ்.பல்கலைக்கழகம் உட்பட பல நிறுவனங்களுக்கு, பல விண்ணப்பங்களை அனுப்பியும், எதுவித பதிலும் கிடைக்காதநிலையே தொடர்ந்தது. இந்தநிலையில் பொதுநலவாய செயலகத்தினூடு கொண்ட தொடர்பின்மூலம் பப்புவா நியூக்கினியில் பல்கலைக்கழகத்தில் பதவி பெற்றுச் செல்கின்றார். அங்கு மூன்று கல்லூரிகளில் கலைத்திட்ட அபிவிருத்திப பணிகளில் ஈடுபட்டு, பின்னர் - 1979 ஆம் ஆண்டு மீண்டும் இலங்கை வந்து, மீண்டும் விண்ணப்பங்கள். மீண்டும் பதிவிலே இல்லையென்ற ஆதங்கம்.

கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. இவரின் சிறப்பை இன்னொரு ஆபிரிக்க நாடான நைஜீரியா அங்கீகரிக்கின்றது. அங்கு விஞ்ஞான தொழில்நுட்பத்துறை சார்ந்த நைஜீரியா பல்கலைக்கழகத்தில் தன் பணியை ஆரம்பிக்கிறார். அவர் அங்கு - உபவேந்தர், டீன்ஸ், செனெட் ஆகிய மூன்று தகுதிகளிலும் உள்ளோருக்கு ஆலோசகர் என்ற பதவியும், கலைத்திட்ட ஆக்கக்குழுக்களின் தலைவராகவும் கடமை புரிகின்றார்.

இதனைத்தொடர்ந்து, மீண்டும் பப்புவா நியூக்கினிக்குச் சென்ற எதிர்வீரசிங்கம் ஐயா- நான்கு வருடங்கள் கடமையாற்றிய பின்னர் ஐக்கிய அமெரிக்காவுக்குத் திரும்புகிறார். இதன்பின்னர் - 1994 இல் கிளிநொச்சியில் விவசாயபீடம் தோற்றம் பெற்றபோது, அங்கு ஒரு வருடம் கடமையாற்றியவர் பின் ஏதோ அவரது சேவை தொடர்வதில் நிறுவனம் தயக்கம் காட்டியதாகக் குறிப்பிடுகிறார். ஆனாலும், 1996 ஆம் ஆண்டில் மீண்டும் வன்னிப் பெருநிலப்பரப்பில் விவசாயம் தொடர்பான பொதுப்பணித்துறைகளுக்கு தன் சேவையைச் செய்தாகக் கூறுகிறார்.

இவரது விளையாட்டுத்துறை ஈடுபாட்டின், இரண்டாம் கட்டமாகத்தான் சியராலியோன் நாட்டில் விளையாட்டுத்துறையுடன் கொண்டிருந்த தொடர்பைக் குறிப்பிடுகிறார். 1966 - 1995 ஆம் ஆண்டுவரை இந்தநாட்டின் கிரிக்கெட் துறையில் தடம்பதித்த ஒருவராகத் திகழும் இவர், சியராலியோன் பல்கலைக்கழகத்தின் அணித்தலைவராகவும், சியராலியோன் தேசிய அணியின் உதவித் தலைவராகவும், மேலும் தேசிய அணியின் வேகப்பந்து வீச்சாளரின் பயிற்றுனராகவும் இருந்துள்ளார். பொதுநலவாய அணிக்கெதிராக விளையாடிய போது, இவர் எதிர்கொண்ட கிரிக்கெட் வீரர்களில் சிலர் - ரோனிகிரெய்க், அண்டர்வூட், மைக்டெனிஸ், கீத் பிளெச்சர், காமினி குணசேன, மைக்ஸ்ரூபட் (அலெக்ஸ்ரூபட்டின் தந்தை) மற்றும் எல்லோரது மனமும் கலர்ந்த நடுவர் டேவிட் ஷெப்பட்டையும் அறிந்தவராக இருக்கிறார். மைக்டெனிஸ், கீத்பிளெச்சர் - இபதுல்லா ஆகியோர் தன் பந்துவீச்சில் பவிலியன் திரும்பியவர்கள் .என்றும் கூறுகிறார்.

நிரம்பவே இவரது அனுபவங்களை, ஆற்றல்களை அறிந்தபின்னர் இன்று எம்மவரின் விளையாட்டுத்துறை ஆர்வம், எதிர்காலம் பற்றிய திசையில் பேச்சுத் திரும்பியது. 1988 இல் மேற்கொண்ட ஒரு ஆய்வின்படி - சாதாரணதர மாணவன் வாரத்தில் முப்பது மணித்தியாலம் வகுப்பறைக் கற்றலிலும், 20 மணிநேரம் பிரத்தியேகக் கல்வி பெறுவதிலும் செலவழிக்கிறார். உயர்தர மாணவன் 30 மணிநேரம் பாடசாலையிலும், 28 மணிநேரம் பிரத்தியேகக் கல்வியிலும் செலவிடுகிறான். எனவே, விளையாட்டுப்பயிற்சி என்பதற்குச் சந்தர்ப்பமே இல்லை. மேலும் விளையாட்டுத்துறைப் பயிற்றுனர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர். அம்பியர்கள் பெரிதும் விளையாட்டுப் பயிற்றுவிப்பில் அக்கறை காட்டுவதும் குறைவு என்கிறார்.

வசதி வாய்ப்புக்கள் பற்றிக் கேட்டபோது, எனதுகாலத்தில் என்ன வசதிகள் இருந்தது என்றார். திரும்பவும் இயற்கையாக இருக்கும் விளையாட்டு ஆர்வத்தை மேலும் அபிவிருத்தி செய்தல்வேண்டும். அத்தோடு பத்திரிகைகள் சிறுபராயத்து வீரர்களிலிருந்தே முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகள் பிரசுரிக்கவேண்டும். மேலும் சாதனைத் தரப்புகள் மிக முக்கியம் இவை 'பேணப்படவேண்டும் அறிக்கை செய்யப்படவும் வேண்டும். எமது பிள்ளைகளிலிருந்து சர்வதேசத்தரம் வாய்ந்த வீரர்களை உருவாக்குவதாயின் - 10,11,12,13 வயதில் பயிற்றுவிக்கத் தொடங்கவேண்டும். அவர்களிலிருந்து ஆற்றல் விஞ்சிய முதல் மூவர் என்றரீதியில் தெரிவுசெய்து, அவர்களையும் புடம்போட்டு எடுக்கவேண்டும். வீரர்களுக்கு ஒரே சிந்தனை, ஒரே இலக்கு, ஒரே நோக்கு மூன்றாவது வேறுபுலன்கள் இன்ற எடுத்த கொள்கையின் கூர்மையாக இருக்கவேண்டும் (**Tunnelvision**) என்கிறார்.

ஐயாவின் கருத்துக்கள் - அனுபவத்தின் ஊடே, அதிலும் விளையாட்டு மற்றும் கல்வி இரண்டிலும் மிக்க உயர்தரம் கொண்ட வகையில் வெளிவந்தன.

மனைவி, இரண்டு மகன்கள், ஒரு மகள், மகள் வயிற்றுப் பேரன் என்று சுருக்கமாகவே தன் குடும்பத்தைப் பற்றிக் குறிப்பிடும் பெரிய மனிதராக இவர் இருக்கிறார். ஆச்சரியமாய் இருந்தது. எங்கே புகழ் என்று பசாசுக்குணம் கொண்ட மனிதர்களின் மத்தியில், தாமே சகலதும், தாமே பிதாமகன் என்று தமக்குத்தாமே முதுகில் தட்டிக்கொண்டும் அல்லது, முதுகில் தட்டி சபாஷ் போடுவார்கள் என்று அங்கலாய்க்கும் மனிதர்கள் மத்தியில் இப்படியும் ஒருவரா? எவ்வளவு எளிமை. எவ்வளவு பணிவு. இவருடன் உரையாடிய அந்தச் சில மணிநேரத்தில், நாங்களும் மனிதத்துவம் பற்றிய உணர்வைக் கொண்டோமென்றால், இந்த வரட்டுச் சமூகத்தில் கற்கஇயலாததொன்றை அவரிடம் கற்றுக் கொண்டோம் என்று பெருமைப்படலாம். ஏனென்றால், அவர் ஒரு மனிதனாக மனதினுள் நுழைந்துவிட்டார். ஆம் நாங்கள் ஒரு மனிதனைச் சந்தித்தோம்.

கலந்துரையாடல்
**ஜோசப்கிருஸ்ணா - விக்கி**

- ★ **இருமுறை ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டவர்**
- ★ **ஆசிய விளையாட்டுக்களில் உயரம் பாய்தல் (1958) தங்கப்பதக்கம் வென்றவர்.**
- ★ **2002 - இலங்கையில் நடைபெற்ற சாம்பியன்ஷிப் போட்டிகளில் ஒலிம்பிக் தீபம் ஏற்றியவர்.**
- ★ **விவசாயத்துறை கலாநிதிப்பட்டம் பெற்றவர்.**
- ★ **ஐ.நா சபையின் கல்வித்தரத்தில் P.5 என்ற தகமை பெற்றவர்** HIGHER PROFESSIONAL CATOGARY IN THE PROFESSIONAL SYSTEM
- ★ **லேக்கவுஸ் நிறுவனம் நடாத்திய** SPORTS STAR **போட்டிகளில் ரசிகர்களின் வாக்களிப்பின் மூலம் 1955 - 1956 வருடங்களின் இரண்டு முறை வென்றவர்.**

# ஹேடனுக்கு ஒரு ஆசை



கங்கூலி
சவாலுக்கு அஞ்சாதவர்

ஸ்ரீவ்வோ அலை கொஞ்சக் காலத்துக்கு ஓயப் போவதில்லை. தனது இறுதி டெஸ்ட் தொடரின்போது ஆரவாரமான பிரியாவிடையொன்றை ஸ்ரீவ்வோவுக்கு வழங்கவேண்டும் என்பது, மத்தியூ ஹேடனின் அவா. கடந்த இருபது வருடங்களாக அவுஸ்திரேலியர்களின் உணர்வோடு கலந்துவிட்டவர் வோ என்கிறார் ஹெடன். சிட்னி மைதானத்தில் நடைபெறும் டெஸ்ட்போட்டி, ஸ்ரீவோவின் தாயக மைதானப் போட்டியாக இருக்கும். அதனை நாம் பெரிதாகக்கொண்டாடுவோம் என்கிறார் அவர். ஸ்ரிவோ மிகப் பெரும் ஆரவாரத்துடன் வழி அனுப்பிவைக்கப்பட வேண்டியவர் என்பது அவரதுகருத்து. சரி அதனை எவ்வாறு செய்வதுஎன்றால், இந்தியாவை டெஸ்ட் தொடரில் தோற்கடிப்பதன் மூலம் தான் என்று மறைமுகமாக ஹெடன் கூறுகிறார் போலத் தெரிகிறது. ஏனெனில் தொடர்ந்து ஹேடன பேசும் போது, இந்திய அணி பற்றிய கருத்துக்களை முன்வைக்கிறார். ஹர்பஜனின் பந்து வீச்சைப் பற்றி அவதானமாக இருக்க வேண்டும் என்பவர், இந்திய அணி கடந்த சில வருடங்களாக நன்கு முன்னேறியுள்ளது என்கிறார். திராவிட், சச்சின், ஷேவாக் போன்றோர் பற்றியும் புகழாரம் சூட்டுகிறார் ஹேடன். இவையெல்லாவற்றையம் கூறிவிட்டு, ஸ்ரீவோவுக்கு மகத்தான பிரியாவிடையும் கொடுக்கவேண்டும் என்றும் கூறுகிறார். இந்தியா இந்தக் கருத்துக்களை எப்படி எடுத்துக் கொள்ளப்போகிறது. முதலாவது டெஸ்ட்போட்டி போகிற போக்கைப் பார்த்தால், ஸ்ரீவ்வோ மிக ஆடம்பரமான பிரியாவிடையைக் காண்பார் போலவே தெரிகிறது. **வெரோனிக்கா**

# விரலோரக் கவிதைகள்

முரளி பற்றிய அந்தச் செய்தியை படித்தபோது, சிறிது ஆச்சரியமாகத்தான் இருந்தது. ரெய்ஸ் கொதிக், வேன் , டிச்சர் போன்றவர்களுக்குத்தான் சில விசேடித்த பந்துவீச்சுக் களை வீசப் பயிற்சி பெற்றிருக்கிறேன்: அவற்றை இந்த டெஸ்ட் தொடரில் காட்டுவேன் என்று கூறியதாகச் செய்திகள் வந்திருந்தன. உலகத் தரம்வாய்ந்த முரளி ஏன் இப்படியொரு கருத்தைத் தெரிவித்திருந் தார் என்று இவரின் ரசிகர்கள் விசனம் தெரிவித்திருந்தார்கள்.



முரளி

அலைகள் ஓய்வதில்லை

ஆனால் முரளி இப் போது பேசுகிறார். நான் அந்த மாதிரி எந்தக் கருத்தையும் கூறவில்லை. நான் அப்படியெல்லாம் கூறியதாகச் செய்திகள் பரவின என்று கேள்விப்பட்ட போது, மிகுந்த ஆச்சரியம் அடைந்தேன் என்பவர், இங்கிலாந்து இலகுவில் தோற்கடிக்கப்படத்தக்க அணியல்ல என்கிறார். கடந்த இரண்டு டெஸ்த் தொடர்கள் இலங்கைக்கு சாதகமாக அமையவில்லை என்றாலும், அது எங்களுக்கொரு அழுத்தமாக இருக்கவேண்டும் என்பதல்ல என்கிறார் தன்னம்பிக்கையுடன். இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர் கிரகம் தோர்ப் - முரளி பற்றி உயர்வாகக் கருதுவதாகக் கூறுகிறார். அவர் கடந்த இலங்கை டெஸ்ட் தொடரில் 269 ரன்கள் சேர்த்ததை நினைவு கூருகிறார். எப்போதும் வித்தியாசமான முறையில் முயற்சிக்கவேண்டும். சில வேளைகளில் அது பலனளிக்கலாம், சில சந்தர்ப்பங்கள்ில் பலனளிக்காமலும் போகலாம். ஆனால், நாங்கள் எப்போதும் முயற்சித்துக் கொண்டே இருக்கவேண்டும். என்ன இருந்தாலும், இப்போது முரளி பேசுவது நியாயமாகப்படுகிறது. இதுவே நாகரிகமான கருத்துக்களாகவும் இருக்கிறது என்பதும் உண்மை. முரளிகூட இன்னும் கவனமாக இருப்பது நல்லது போலவே தெரிகிறது. சிலவேளைகளில் அவருக்குக் கலக்கம் உண்டுபண்ணும் செயற்பாடுகளும் கூட பின்னணியில் இருக்கக் கூடும். இன்னும் சில வருடங்கள் நின்று பிடித்து இன்னும் சாதனை இலக்குகள் நோக்கி வேகமாக செல்லும்திறன், நிறையக் கொண்டவர் அவர். தனது பந்துவீச்சையும் தன் உடல் தகுதியையும் மட்டும் கவனத்தில் கொண்டால் போதாதது போல இருக்கிறது. தன்னைச் சூழ்ந்து நடப்பவை பற்றியும் அவதானமாக இருக்கவேண்டும் என்கிறார். விளையாட்டுத் திறமையை என்றும் மதிக்கும் ஒரு ரசிகா. இந்தக் கட்டுரையை நிறைவு செய்ய உத்தேசிக்கும்போது முரளி மீண்டும் சாதனை புரிந்திருக்கிறார் முதலாவது டெஸ்ட்டில் 46 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்கள் வீழ்த்தயிருக்கிறார். 5 விக்கெட்டுக்களுக்கு மேல் விக்கெட் சரிப்பது இது முரளியின் 39 ஆவது தடவை ஆகும்.

ரோஜா.

# சாத்திரங்கள் பொய்க்குமா

இந்தியஅணி அவுஸ்ரேலிய அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் சந்திக்கும்முன்னமே, பல அதிருப்திகளை எதிர்நோக்கியிருக்கிறது. இதில் இந்திய அணியின் தலைவர் சௌரவ் கங்கூலியின் நடத்தை கேள்விக் குறியாகி உள்ளது. குயீன்ஸ்லாந்து அக்கடமிக்கு எதிரான ஒரு ஆட்டத்தில் முப்பத்தைந்து ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்த கங்கூலி ஆட்டம் இழந்தார் என்று அறிவிக்கப்பட்டபோது, கங்கூலி அதை ஏற்றுக்கொள்வதாக இல்லை. மைதானத்திலேயே சிறிது தாமதித்துத் தன் எதிர்ப்பைக் காட்டிய அவர், பின்னர் மைதானத்தை விட்டே வெளியேறி தான் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றுவிட்டாராம். இதற்கு முன்னதாகவே காலையில் தனது அணியினர் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது, அவர் பயிற்சியில் (NETS) ஈடுபடச் சென்றுவிட்டாராம். டெஸ்டுக்கு முன்னதான இரண்டு ஆட்டங்களும் கங்கூலிக்கு வாய்ப்பாக அமையவில்லை. அவரால் சேகரிக்கக் கூடியதாக இருந்த ஓட்டங்கள் இரண்டும், ஆறும் மட்டுமே யாகும். இந்த நிலையில் தற்போது அவர் நடந்து கொண்ட முறை பெரும் அதிருப்தியை உருவாக்கி இருக்கிறது. அதிலும் சர்வதேச அணியொன்றின் தலைவர் தனது அணி மைதானத்தில் ஆடிக்கொண்டிருக்க. தனது தனிப்பட்ட பயிற்சிக்காகச் சென்றமை எப்படிச் சாத்தியமானது என்று வியப்புறுகிறார்கள் விமர்சகர்கள்.



ஷகீர்கான்

ஜாதகத்தை மாற்றுவேன்

மேலும் இவரின் நடத்தை இன்னொருவகைக் குறியீடாகவே விமர்சகர்களால் காணப்படுகிறது. குயின்ஸ்லாந்து அணியின் இரண்டாம் நிலை அணியுடன் சமதையாகப் போட்டியட முடியாத நிலையைச் சுட்டிக்காட்டுவதுடன், குயின்ஸ்லாந்து அக்கடமியின் ஒரு வீரர் இரண்டு இன்னிங்சுகளிலும், சதம் அடித்ததையும் எடுத்துக்காட்டி, இந்த நிகழ்வு அவுஸ்திரேலியாவில் நிற்கும் இந்திய அணியின் அழுத்தத்தையும், அவநம்பிக்கையையும் எடுத்துக் காட்டுவதாகவே குறிப்பிடுகிறார்கள். ஒரு பயிலுனர் குத்துச்சண்டை வீரரிடம் தோற்கும் தலைசிறந்த குத்துச்சண்டை வீரரின் நிலையில், இந்திய அணி இருக்கிறது என்றும் ஸ்ரீவோவின் அணியைச் சந்திக்கும்போது, அது உலகப் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர் முகமது அலியைச் சந்திப்பது போலத்தான் இந்தியாவிற்கு இருக்கப்போகிறது என்கிறார்கள் சாகசமாக. இந்த வகையில் பார்க்கும்போது அவுஸ்திரேலிய அணியை தன்னம்பிக்கையுடன் இந்தியா எதிர்கொள்ளும் போலத்தெரியவில்லை என்கிறார்கள் சில கிரிக்கெட் வீரர்கள். ஆனால் இந்திய அணியில் தலைசிறந்த வீரர்கள் இருப்பதையும் அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். இந்த நிலையில் இந்தியாவின் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சுற்றுப் பயணம் எப்படி அமையப்போகிறது என்று எதிர்வுகூறுவது கடினமாகவே இருக்கும்.

சரண்யன்.

# அக்தாரின் தேவை உண்டு

நியூசிலாந்துடனான ஒருநாள் போட்டிகளில் - பாகிஸ்தான் அணி சிறப்பாகவே செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தநிலையில் வேகப்பந்து வீச்சாளர் சோஹெய்ப் அக்தார் தனது தடைதாண்டி அணியில் சேர்ந்து கொள் ளவுள்ளார். 92 ஒரு நாள் விக் கெட்டுக்களை வீழ்த்தியுள்ள அக்தார், உல கின் வேகமான பந்து வீச்சுச் சாதனைக்கு உரியவர். இதேவேளை இன் சமாம் உல்ஹக் உபாதை யில் பாதிக்கப்பட்டிருக்கிறார் எனி னும், அடுத்த இன் னொரு ஒருநாள் போட்டியில் விளையாடினால் ஒருநாள் போட்டிகளில் 300 ஆட்டங்கள் கண்ட இரண்டாவது பாகிஸ்தான் வீரராகிவிடுவார். இதற்கு முன்னர் இந்தச் சாதனையைப் புரிந் தவர் வசீம் அக்ரம் மட் டுமே. இன்னொருபுறும் இப்போது மொஹமட் சமியும், ஷாபின் அக்தாரும் குறிப்பிடத்தக்க அளவிற்கு திறமை யாகப் பந்து வீசிக்கொண்டிருப்பதை அவதானிக்கமுடிகிறது. மறுபுறம் சிரேஷ்ட வீரர் மொயின்கான் மீண்டும் அணிக்குள் உள்வாங்கப்பட்டிருக்கிறார். அதுமட்டுமன்றி சிறப்பாகவே துடுப்பாடிக் கொண்டிருக்கிறார்.



அக்தார்

தேவை இவர் சேவை

இதேவேளை டிசம்பர் பத்தொன்பதில் ஆரம்பிக்கவிருக்கும் பாகிஸ்தான் நியூசிலாந்து டெஸ்ட்போட்டியில் ஸ்ரீபன் பிளமிங் விளையாடுவாரா என்பது கேள்விக்குறியாகியுள்ளது. இந்தியாவில் கடந்த மாதம் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இடைநடுவிலேயே ஸ்ரீபன் பிளெமிங் உபாதைக்குள்ளானர். நான் விரைவில் உடல் நிலை தேறி விளையாடவே விரும்புகிறேன் என்கிறார் அவர். ஏற்கனவே பலவீனமான அணியாகவே நியூசிலாந்து அணி கிறிஸ் கெயின்ஸ் தலைமையில், பாகிஸ்தான் வந்திறங்கியிருந்தது. இந்த நிலையில் ஸ்ரீபன் பிளெமிங்கும் இல்லாவிட்டால், நியூசிலாந்து அணி பாகிஸ்தானுடன் தாக்குப்பிடிக்க முடியுமா என்பதும் ஒரு கேள்விக்குறிதான்.

சித்ரா

# இந்தியா - தலை தப்புமா

பலத்த எதிர்ப்பார்ப்புகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் மத்தியில் தொடங்கிய இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட்போட்டியின் - முதலாவது போட்டி அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேர்ன் நகரில் தொடங்கி நடைபெற்றுவருகிறது. இந்திய அணி நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்றவுடன், அவுஸ்திரேலிய அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இந்த முடிவு இந்திய அணிக்கு இந்த டெஸ்ட்போட்டியில் சில சிக்கல்களைத் தோற்றுவிக்கலாம் என்பது கிரிக்கெட் ஆய்வாளர்களின் கணிப்பு. முதல் நாள் ஆட்டமுடிவில் 262 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை அவுஸ்திரேலியா இழந்திருந்தது. மொத்தமாக 62 ஓவர்கள் வீசப்பட்டிருந்தது. அதிலே மத்தியூ ஹேய்டன் 37 ஓட்டங்கள், ரிக்கிபொண்டிங் 54 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார்கள். லாங்கர் மற்றும் மார்டின் ஆகியோர் தலா 115, 36 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்கள். பந்துவீச்சில் ஷகீர்கான் மட்டும் 2 இலக்குகளை வீழ்த்தினார். இரண்டாம் நாள் ஆட்டமுடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 323 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றது. அதிலே மழைகாரணமாக ஆட்டம் தடைப்பட்டது. லாங்கர் LBW முறையில் ஆட்டமிழந்து 121 ஓட்டங்களில் வெளியேறினார். ஸ்ரீவோ ஓட்டமெதனையும் பெறாமல் வெளியேறினார். டேமியன் மார்ட்டின் 42 ஓட்டங்ளைப் பெற்றார். மழைதான் அவுஸ்திரேலிய அணியின் விக்கெட்டுக்கள் மளமள வென சரிவதற்குக் காரணம் எனக்கூறப்படுகின்றது. ஆனால், இந்திய அணியினருக்கு இது சந்தோசமா? துக்கமா? பொறுத்திருந்துதான் பாாக்கவேண்டும்.



கங்கூலி

## அணிவிபரம்

| இந்தியா | நடுவர்கள் | அவுஸ்திரேலியா |
|---|---|---|
| 1. ஆகாஷ் சோப்ரா | 1. பக்னர் | 1. ஜஸ்டின் லாங்கர் |
| 2. வீரேந்தர் ஷேவாக் | 2. கோர்ட்சன் | 2. மத்தியூ ஹேய்டன் |
| 3. ராகுல் ராவிட் | | 3. ரிக்கி பொண்டிங் |
| 4. சச்சின் டெண்டுல்கர் | | 4. டேமியன் மார்டின் |
| 5. வி.வி.எஸ். லக்ஸ்மன் | | 5. ஸ்ரீவ்வோ (தலைவர்) |
| 6. சௌரவ் கங்குலி (தலைவர்) | | 6. கார்டிச் |
| 7. பார்த்திவி பட்டில் | | 7. அடம் கில்கிறிஸ்ற் |
| 8. அஜித் அகர்கர் | | 8. அன்ரூ பைக்கல் |
| 9. ஹர்பஜன்சிங் | | 9. ஜிலெஸ்பி |
| 10. ஷகீர்கான் | | 10. மக்கில் |
| 11. ஆஷிஷ் நெஹ்ரா | | 11. பிறக்கன் |

தொகுப்பு
N.P.சுதர்சன்

# வேகம் இவர்களின் தாகம்

மேற்கிந்தியத்தீவுகள் - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஐந்து ஒருநாள் போட்டிகள் முடிவடைந்துவிட்டன. சிம்பாப்வே பலம்குறைந்த அணியென்ற எண்ணத்தை ஓரளவு அகற்றிட மேற்கிந்திய - சிம்பாப்வே சுற்றுப்பயணம் ஓரளவில் உதவியிருக்கிறது. இந்தவகையில் மேற்கிந்திய சிம்பாப்வே ஒருநாள் போட்டித்தொடரை 3 - 2 என்றவாறு மேற்கிந்தியத்தீவுகள் வென்றிருந்தாலும், சிம்பாப்வேயும் ஈடுகொடுத்து விளையாடியிருப்பது புலனாகிறது.

இன்னொருபுறம் மேற்கிந்தியத்தீவு அணியின் பலவீரர்கள் தங்கள் தடங்களை நன்கு பதித்துள்ளார்கள். இந்தவகையில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் புதுமுக வேகப்பந்து வீச்சாளர்கள் பிடல் எட்வேட்ஸ் தனது முதலாவது ஒருநாள் ஆட்டத்திலேயே சாதனையொன்றைப் புரிந்துள்ளார். எட்வேட்ஸ் ஏழு ஓவர்களில் இருபத்தியிரண்டு ஓட்டங்கள் மட்டும் கொடுத்து, ஆறு விக்கெட்டுக்களை சாய்த்தமை எந்தவொரு ஒருநாள் போட்டியிலும் முதன்முதலில் களமிறங்கும் வீரரின் சாதனையாக அமைந்துவிடாது.

சிம்பாப்வேயின் தொடக்க ஆட்டக்காரரான - பார்னி றொஜர்சிங் இலக்கைத் தனது முதலாவது பந்திலேயே வீழ்த்திய எட்வேட்ஸ் பின்னர் தனது பந்துவீச்சில் ஒரு கட்டத்தில் தனது தொடர்ச்சியான இரு பந்துகளில் வுசிசிபண்டா மற்றும் கிரெய்க் விஷாட் இருவரையும் திருப்பி அனுப்பினார். ஆனாலும் இவரது HAT - TRICK சாதனையை மட்சிக் கெய்னர் தடுத்துவிட்டபோதும் பின்னர் இவரையும் எட்வேட்டே வீழ்த்தினார். சிம்பாப்வேயின் துடுப்பாட்டத்தில் ஒரு சிறப்பு, அணியின உபதலைவர் தைபு சேர்த்த 66 ஓட்டங்கள். ஆனால எட்வேட்ஸ் இவரையும் குறிவைத்து நேராக இலக்கைத் தாக்கி, தைபுவையும் பவிலியன் நோக்கி அனுப்பிவிட்டார். முதலில் மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்று விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 45 ஓவர்களில் 256 ஓட்டங்களைப் பெற்றது. இதற்கு பதிலளித்து ஆடிய சிம்பாப்வே மழையின் காரண்மாக துடுப்பாட்டம் தடைப்பட்டபோது ஏழுவிக்கெட் இழப்பிற்கு 32 ஓவர்களில் 150 ஓட்டங்கள் மட்டுமே பெற்றிருந்தது. இதன் பின்னர் டக்வெர்த் லூயிஸ் கணிப்பீட்டு முறையின்கீழ் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. மழை குழப்பாமல் இருந்திருந்தால் தனது மிகுதி மூன்று ஓவர்களில் இன்னும் ஒரு சில விககெட்டுக்களை எட்வேர்ட்ஸ் சாய்த்திருப்பாரோ என்னவோ.

நிமலா

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை*
*எல்லா அறமும் தரும்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### வரலாற்றுப் பதிவும் காலத்தின் தேவையும்

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டம் எத்தனையோ பரிணாமங்களை கடந்தும், புதிய புதிய பரிணாமங்களை எட்டியும் தனது இலக்கு நோக்கிய நகர்வை, அரசியல் சூழல்கள் மாறும் போதெல்லாம் போராட்ட வடிவங்களை மாற்றி மாற்றி முன்னெடுக்கப்பட்டே செல்கிறது.

இந்த விடுதலைப் போராட்டம், உலகில் நடைபெற்ற மற்றும் நடந்துவரும் ஏனைய ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்கான போராட்டங்களைப்போன்றே ஆரம்பத்தில் முகிழ்ப்புக் கொண்டிருந்தாலும், அதன் படிமுறை வளர்ச்சியின்போது சந்தித்த நெருக்கடிகளும், திருப்பங்களும், இழப்புக்களும், மீட்புகளும், அதன்போதான அனுபவங்களும், போரியல் வரலாற்றில் புதியதும் வியத்தகு தன்மை கொண்டதுமான, பதிவுகளை அழுத்தமாகவே பதித்துள்ளது.

தமிழீழ மக்களின் விடுதலை உணர்வும், சுதந்திர தாகமும், தியாக உணர்வும், அர்ப்பணிப்புமிக்க செயற்திறனும், வீர எழுச்சியும், சமகாலத்தில் ஏனைய ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் நாடுகளில் அடக்குமுறைகளில் இருந்து அவர்கள் தம்மை விடுவித்துக்கொள்ள நடத்தும் போராட்டங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட, ஏனையோருக்கு முன்னுதாரணமானதும், உலகமே வியந்து பிரமித்துநிற்கும் தன்மை கொண்டதுமான தனித்துவ அடையாளம் காட்டி நிற்பதை வரலாறு அறிந்தோர் அறிவர்.

இந்த விடுதலைப் போராட்டத்தின் தன்மை, அரசியல் இலக்கு, போராட்ட வழிமுறைகளின் வடிவமாற்றம், ஆகியன உலகப்போரியல் வல்லுநர்களின் ஆய்வியல் இலக்கண வரையறைகளையே, வரைவிலக்கணங்களையே, மீளாய்வு செய்யும் நிலைக்கு கொண்டு வந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிப்பது மிகையான ஒன்றல்ல.

தற்போதைய சமாதானச்சூழல் என்பது, போரின் நிறுத்தத்தை கோடிகாட்டி நிற்கின்றதேயன்றி, போரின் முடிவைச் சுட்டிநிற்கவில்லை.

இந்த சமாதானச்சூழல் ஒரு நீண்ட, நெடிய, பயணத்தின் இடைத்தங்கல் அல்லது இளைப்பாறுநிலைமட்டுமே.

இந்த நீண்ட பயணத்தின் தூரத்தை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு தற்போதைய நிலையில் சிறிலங்கா அரசிடமே உள்ளது.

தமிழ்மக்கள் மிக நீண்டதூரம் போராட்டத் தளத்தில் நடந்து, தம்மை உறுதிப்படுத்திக் கொண்டவர்கள். தமது இலட்சியத்தை அடைவதற்காக இன்னும் எவ்வளவு தூரமும் செல்லத் தயாராகவும் உள்ளவர்கள்.

அவர்களின் போராட்ட வரலாறு அதை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

நேற்றைய தினம் யாழில் வெளியிட்டு வைக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் மாலதி படையணியினரின் 'விழுதாகி வேருமாகி' என்ற சமகால போராட்ட வரலாற்று இலக்கிய நூல் இதனை அழுத்தமாகவே பதிவுசெய்துள்ளது.

ஏற்கனவே தமிழ்மக்களின் போராட்ட வரலாற்று நிகழ்வுப் பதிவுகளை, கள அனுபவங்களை, சமகாலத்திலேயே உடனுக்குடன், இலக்கிய உணர்வுடன் கூடிய வரலாற்றுப் படைப்புக்களாக உருவாக்கப்பட்டு நூலாக்கம் பெற்றுள்ளன.

இத்தகைய நூல்கள் போர்நடந்து கொண்டிருந்த காலத்திலும் சரி, போர் நிறுத்தப்பட்டிருந்த காலத்திலும் சரி, அடுத்தடுத்து வெளிவந்து கொண்டிருப்பதானது - தமிழ்மக்களின் விடுதலை உணர்வுகளை, அவர்கள் தமது இலட்சியத்தை எட்டும்வரை சுதந்திர வேட்கையுடன் உறுதியாகவும், நம்பிக்கையுடனும் வைத்திருக்க மட்டுமல்ல, தங்கள் மக்களுக்காகவும், தங்கள் மண்ணுக்காகவும், மிகப்பாரிய தியாக அர்ப்பணிப்புக்களை துணிவுடனும், வீரத்துடனும் செய்த வீரச்செல்வங்களின் சாதனைகளை உலகறிய வைக்கவும் செய்யும் என்பது உண்மை.

உண்மையில் தமிழ்மக்களின் வரலாற்றை சிறிலங்காவின் பேரினவாத சிந்தனையாளர்கள் எப்படியெல்லாம் மூடிமறைத்து, இந்த மண்ணில் தமிழ்மக்களுக்குரிய உரிமையை நிராகரித்து, அவர்களை இரண்டாந்தரப் பிரஜையாகக்கூட அல்லாது, கொத்தடிமைகளாக, சுயத்தன்மையற்றவர்களாக மாற்றிவிட முயற்சித்தார்கள் என்பது விபரிக்கவேண்டிய ஒன்றல்ல. அதற்கு சிங்கள அரசுகள் வழங்கிய ஒத்துழைப்பு நன்கு தெரிந்த விடயமே.


ஆனால், வரலாறு எப்படியெல்லாம் மாறிவிட்டது.

இன்று இந்த மாற்றத்தை ஏற்படுத்திய மாபெரும் ஆற்றலுக்குரியவர்களான அந்த மாவீரர்களும், விடுதலைப் போராளிகளும் ஆற்றிய சாதனைகள் முழுமையாகப் பதிவுசெய்யப்படவேண்டும்.

இலக்கியமாக, காவியமாக, வரலாற்றுக் கலைப் படைப்புக்களாக அவற்றை உருவாக்கி தமிழ்மக்களின் எதிர்காலத் தலைமுறைக்கு மாபெரும் பொக்கிஷமாக வழங்கவேண்டிய பொறுப்பு களத்தை வழிநடத்தி, களமாடி வென்றுநிற்போருக்கு மட்டுமல்ல, தளத்தில் நின்று மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களின் துன்பதுயரங்களை மட்டுமல்ல, துணிச்சலும், உறுதியுமிக்க வாழ்வியக்கங்களை உணர்ந்தவர்களுக்கும், அதாவது, ஏனைய கலையிலக்கிய படைப்பாளிகளுக்கும் உண்டு. அது அவர்களின் சமூகக் கடமையாகும்.

இன்று துப்பாக்கிகளை ஏந்திய கைகளே பேனாவையும் ஏந்த ஆரம்பித்திருப்பதானது கற்பனை கலக்காத உண்மை வரலாறு. இலக்கியமாக உலாவர வழிவகுத்துள்ளது. இது காலத்தின் தேவையுமாகும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழ்மக்களின் விடுதலைப் போராட்ட நிகழ்வுகள் அனைத்தும், அனுபவங்கள் அனைத்தும் காலவெள்ளத்தில் அள்ளுண்டு போகாமல் அடுத்த தலைமுறைக்கு போய்ச் சேரவேண்டும். இதுவே முக்கியமானதாகும். அடுத்த தலைமுறை நிமிர்ந்துநின்று கம்பீரமாக உலாவர உந்துசக்தியாக அதுவே இருக்கும்.

## நாடும் நடப்பும்




# இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு ஹக்கீம் குழுவினர் நாடு திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழவினர் இந்தியாவுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளனர்.

இந்தியாவின் டார்லின் பிரதேசத்தில், சார்சால் என்ற பகுதியில் நிலவுகின்ற அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக, ஆய்வினை நிகழ்த்துவதற்காகவே, ஹக்கீம் இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டார்.

முஸ்லிம் காங்கிரசின் நான்கு உறுப்பினர்களும் ஹக்கீமுடன் இந்தியாவிற்குச் சென்று திரும்பியுள்ளனர்.

இந்தியாவில் தாம்பெற்ற அனுபவங்கள், இலங்கையின் முஸ்லிம்கள் தொடர்பான அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் வாய்ப்பாக இருக்கும் என்றும், இவற்றை அறிந்து கொள்வதற்காகவே இந்தியா சென்றதாகவும் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய விஜயத்தின்போது, பல பிரமுகர்களையும், அரசியல்வாதிகளையும் சந்தித்தபோது, இனப்பிரச்சினைத்தீர்வில் முஸ்லிம்களின் பங்களிப்புக் குறித்தும், தாம் முழுமையாக பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததாகவும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்தபோது, கிண்ணியாவிலும், மூதூர்ப் பகுதியிலும் நடைபெற்ற சம்பவங்கள் தனக்கு கவலையளிப்பதாகவும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசும் - மூன்றாம் தரப்புக் குழுவினர்தான் இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணம் என்று கூறுவதை தான் கண்டிப்பதாகவும் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இரண்டு தரப்பினரும் நழுவல் போக்கினைக் கடைப்பிடிக்கும் காரணத்தின் அடிப்படையிலேயே, இக்கருத்தை கூறியிருக்கின்றார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தில் தான் உறுப்பினராக இருந்த போதிலும், தன்னுடைய சமூகத்தினருக்குச்சார்பாக குரல் கொடுக்க உரிமை இருக்கின்றது என்ற அடிப்படையிலேயே தான் இந்தக் கருத்துக்களைக் கூறுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (01)

**சுகாதார ஊழியர்கள்**

## ஒன்பதாம் திகதி வேலை புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடமாட்டார்கள்

சுகாதார சேவை ஊழியர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி வேலை புறக்கணிப்புப் போராட்டத்தில் திட்டமிட்டபடி ஈடுபடமாட்டார்கள் என - சுகாதார சேவை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பள முரண்பாட்டு நிலையைத் தீர்க்கவேண்டும் என்று கோரியே சுகாதார ஊழியர்கள் இந்தப் போராட்டத்தை நடத்த உத்தேசித்திருந்தனர்.

அமைச்சரவை உபகுழுக்கூட்டத்தில் - சுகாதார ஊழியர்களுக்கான சம்பள உயர்வு பற்றிய அறிக்கையைச் சுகாதார அமைச்சர் தயாரத்ன எதிர்வரும் 9 ஆம் திகதி அளிக்கவுள்ளார் எனத் தம்மிடம் உறுதியளித்துள்ளதாகச் சுகாதார ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, தாம் மேற்கொள்ளவிருந்த போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாகச் சுகாதார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. (01)

## தனியார் பேருந்து கட்டணங்கள் உயர்த்தப்படும் சாத்தியமில்லை!

தனியார் பஸ் கட்டணங்கள் உயர்வதற்கான சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை என்று - தேசிய போக்குவரத்துச் சபையின் தலைவர் தலகுண தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும், தனியார் போக்குவரத்துச்சபையும் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டன என்றும், இந்த ஒப்பந்தம் ஜுலை மாதத்தில் ஏற்படுத்தப்பட்டதாகவும், இந்த ஒப்பந்தத்தின்படி, பன்னிரண்டு நிபந்தனையின் அடிப்படையிலேயே பயணிகள் கட்டணத்தைக் கூட்டமுடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

டீசல், உதிரிப்பாகங்களின் செலவினம் ஏழு வீதம் உயருமாக இருந்தால் மாத்திரமே, தனியார் பயணிகள் கட்டணம் உயர்த்தப்பட முடியும் என்று,' இந்த நிபந்தனைகளில் கூறப்பட்டிருக்கின்றது.

இப்போதைக்கு ஏற்பட்டிருக்கும் செலவுகளின்படி, ஏழு வீதமான செலவு தனியார் பஸ் கட்டணங்களை கூட்ட வேண்டிய அவசியம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (01)

# வங்கிக் கடன்களை மீளச் செலுத்துவதில் யாழ். மக்கள் முன்னணியில் உள்ளனர்!

### மக்கள் வங்கி பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

வங்கிகள்மூலம் பெறும் கடன்களை மீளச் செலுத்துவதில் யாழ்ப்பாண மக்கள் நம்பிக்கைக்குரியவர்களாக உள்ளார்கள். இதையிட்டு நாம் பெரும் மகிழ்வடைகின்றோம் என மக்கள் வங்கியின் அபிவிருத்திக்கும், நிதிக்கும் பொறுப்பான பொது முகாமையாளர் பி.வி.பத்திரன தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் நகை அடகு பிடிக்கும் சேவையை யாழ்ப்பாணத்திலும் ஆரம்பித்து வைப்பதற்காக நேற்று வருகை தந்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மக்கள் வங்கியின் நகை அடகு பிடிக்கும் சேவை - நேற்று முதல் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டது. இது தொடர்பாக யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கி கிளையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே பத்திரன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், பாமர மக்களும் வங்கி நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்பதற்காக, 1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வங்கி தான் மக்கள் வங்கி. அன்றிலிருந்து இன்றுவரை தன்னால் இயன்றவரை மக்களுக்கு சேவையாற்றி வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக நுண்கருத்திட்ட, கடன் திட்டத்தை எமது வடபிராந்திய கிளைகளிலும், தற்போது அறிமுகப் படுத்தியுள்ளோம். இதன்மூலமாக பொருளாதாரம், கல்வி எனப் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும்.

சிறுகைத்தொழில்களை மேற்கொள்பவர்கள் எமது வங்கி மூலம் கடனுதவிகளைப் பெற்று தமது தொழிலை அபிவிருத்தி செய்ய முடியும். கணவன், மனைவியும் இணைந்து சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபடும்போது, எவ்விதமான பிணைகளும் இன்றி நாம் அவர்களுக்கு கடனுதவிகளை வழங்கத் தயாராகவுள்ளோம்.

கல்வி அபிவிருத்தியிலும், எமது வங்கி கணிசமான பங்கை ஆற்றவுள்ளது. மகாபொல புலமைப்பரிசில் எமது வங்கிக் கணக்குகள் மூலமாக பெறும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவசமாக ஏ.ரி.எம். அட்டைகளை வழங்கவுள்ளோம். எனவும் தெரிவித்தார். (ச)

# காலக்கெடு விதிப்பதில் காலத்தைக் கழிக்கும் தென்னிலங்கை அரசியல் வாதிகள்



இலங்கையின் தென்பகுதியில் அவ்வப்போது காலக்கெடு விதிக்கப்படுவதும், பின்னர் அந்தக் காலக்கெடு நீடிக்கப்படுவதும், பின்னர் காலக்கெடு விலக்கிக் கொள்ளப்படுவதும் இயல்பான விடயங்களாகும்.

முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் - ஆணைக்குழு என்ற பதம் நடைமுறையில் இருந்து வந்தமை அனைவருக்கும் தெரியும். எந்த ஒரு விடயம் நடந்தாலும், அதனை விசாரணை செய்ய ஆணைக்குழுக்களை அமைப்பதில், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னணியில் திகழ்ந்தார்என்றே சொல்லலாம்.

ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும்போது, அந்த ஆணைக்குழுக்கள் குறிப்பிட்ட திகதிக்குள் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும் எனக் காலக்கெடு விதிக்கப்பட்டு வந்தது. ஆனால், குறிப்பிடத்தக்க எந்த ஒரு ஆணைக்குழுவும், தமக்குரிய காலநியமத்துக்குள் பணிகளைச்செய்து முடிக்கவில்லை அல்லது வேண்டுமென்றே விசாரணை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் நடைமுறை பிற்போடப்பட்டு வந்தது.



அதேநேரம், சில ஆணைக்குழுக்கள் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்தபோதும், அந்த அறிக்கையின் அம்சங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதில் காலதாமதங்கள் ஏற்படுத்தப் பட்டு வந்தன. உதாரணமாக திஸ்ஸ தெய்வேந்திரா சம்பள ஆணைக்குழு விதந்துரைத்து, பல நலன் விடயங்களை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமோ அல்லது தற்சமயம் பதவியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமோ நடைமுறைப்படுத்தத் தயாராகவில்லை.

ஆயினும், அதில் இருக்கும் பாதகமான விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் முன்னுரிமை காட்டப்படுகிறது. திஸ்ஸ தெய்வேந்திரா சம்பள ஆணைக்குழுவின் அறிக்கையில் சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டிருப்பதால், இலாபம் நோக்கிய வேலைப்பளு காரணமாக, அரசாங்க ஊழியர்களில் பெரும்பாலானோர் இந்த சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்திற்குள் தள்ளப்படும் வாய்ப்பு இருக் கிறது. இது வரிவிதிப்பில் - நேர்வரி, மறை முகவரி என்ற பிரிவுகள் இருப்பதுபோல, மறைமுகமான ஆட்குறைப்பு எனச்சொல்லலாம்.

சரி, முன்னர் கூறவந்த காலக்கெடு என்ற விடயத்துக்குள் மீண்டும் செல்வோம். தென்னிலங்கை அரசியலில் ஜனாதிபதியும், பிரதமரும் எதிர்வரும் 15 ஆம் திகதியைத் தங்களுக்குரிய காலக்கெடுக்களாக அறிவித்துள்ளனர். ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதன்பின் - தேசிய அரசு, பின்னர் தேசிய நல்லிணக்க அரசு என்ற விடயங்கள் பேசப்பட்டு வருகின்றன.

அதற்குள் ஜனாதிபதி பொறுப்பேற்ற மூன்று அமைச்சுக்களிலும் சமபங்குகளை, ஜனாதிபதி தரப்பும், பிரதமர் தரப்பும் பகிர்ந்து கொள்வது தொடர்பாகவும் பேசப்பட்டு வருகிறது. இந்த விடயங்களில் ஓரளவு இணக்கங்கள் - மனோ தித்தவெல, மலிக் சமரவிக்ரம குழுவினால் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், பின்னர் அதிலும் பாரியபிளவு ஏற்பட்டுவிட்டது. இரண்டு தரப்பும் சமாதான முன்னகர்வைக் கொண்டுசெல்ல இணக்கங்களை எட்டியுள்ளதாகக்கூறின. ஆனால், அந்த இணக்கங்கள் எவை எனக் கூறப்படவில்லை.

இந்துநிலையில், ஜனாதிபதி இந்தக் குழுவின் முன்னிலையில் மற்றும் ஒரு ஆலோசனையை முன்வைத்தால், இந்த யோசனை ஏற்கனவே இரண்டு தரப்புகளுக்கும் இடையில், அறிக்கையின்படி - வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பளவுயர்வு வழங்கப்படவேண்டுமென்ற விதந்துரை தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை முன்னைய அரசாங்கமோ அல்லது தற்போதைய அரசாங்கமோ நிறைவேற்ற முன்வரவில்லை. தற்போதைய அரசு 2004 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின்படி, நூற்றுக்குப் பத்துவீத சம்பள உயர்வை அறிவித்துள்ளது. அதுவும் தனியார்துறைக்கு இந்த சம்பள உயர்வில் எந்தவித நன்மைகளும் கிடைக்கவில்லை.

**எதிர்வரும் 15 ஆம் திகதி - காலக் கெடுவுக்குள் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்படாது, ஜனாதிபதியே நாடாளுமன்றத்தைக் கலைப்பாரானால், அது மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கூடிய வெற்றிவாய்ப்பு ஒன்றைப் பெறக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கும்.**

திஸ்ஸ தெய்வேந்திரா அணைக்குழு - அரசாங்கத்துறையில் மேலதிக ஊழியர்கள் பணிகளிலிருந்து வருகின்றனர். எனவே, அரசாங்க ஊழியத்துறையில் 40 வீத குறைப்பைச் செய்யவேண்டும் எனப் பரிந்துரைத்திருந்தது. இது வெளிப்படையாகச் சொல்லப்படும்போது, அரசாங்க ஊழியர்களுக்குச் சற்று அதிர்ச்சிதரும் தகவலாக இருந்தாலும், அர்சாங்கதுறையில் - அரசியல் காரணமாக மேலதிக ஊழியர்கள் பணியாற்றுவது உண்மையான தகவலாகும்.

இதனை வெளிப்படையாக நாம் ஏற்றுக் கொள்வதாகக்கூறி, அரசாங்க ஊழியர்துறையில் ஆட்குறைப்பை மேற்கொண்டால், மக்களின் நன்மதிப்பை இழக்கவேண்டிவரும் என்பதைக் கருத்திற்கொண்டே - ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும், தமது வரவு-செலவுத் திட்டத்தில், 'சுயவிருப்பு ஓய்வு' திட்டத்தினை அறிமுகம் செய்துள்ளது.

இந்த 'சுயவிருப்பு ஓய்வு' திட்டம் கட்டியமைக்கப்பட்டாலும், அரசாங்க திணைக்களங்களில் 80 வீதமானவை தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன. முன்னர் எந்த விடயங்களில் இணக்கங்கள் ஏற்பட்டன என்பது குறித்து, ஜனாதிபதியின் தரப்போ அல்லது பிரதமரின் தரப்போ வெளிப்படையான கருத்துக்களை வெளியிடவில்லை. ஆயினும், மீண்டும் ஜனாதிபதி இந்தக் குழுவின் முன்னால் சமர்ப்பித்த யோசனைகள் - வெளிப்படையாகவே ஊடகங்கள் மூலம் பரவச்செய்யப்பட்டன.

அதன்படி, ஜனாதிபதி தாம் சமாதான முன்னெடுப்புகளிலிருந்து நழுவி, அந்தப் பொறுப்பைப் பிரதமரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலையை அறிவித்திருந்தார். அத்துடன், தாம் பொறுப்பேற்ற பாதுகாப்பு அமைச்சை முழுமையாக மீண்டும் ஒப்படைக்க முடியாது எனவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சு ஒன்றைப் பிரதமரின் தெரிவிற்காக வழங்கலாம் என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஊடக அமைச்சைத் தமது பொறுப்புக்குக் கீழே கொண்டுவருவதற்கு, ஜனாதிபதிக்கு எவ்வித காரணங்களும் இருக்கவில்லை. ஆனால், தற்பாதுகாப்புக்காக இதனைத் தம் வசப்படுத்திய அரசு - அதனை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு விட்டுத்தரமுடியாது என்ற நிலைப்பாட்டைத் தமது யோசனையில் தெரிவித்திருந்தது.

உள்துறை அமைச்சு குறித்து, அவர் எதனையும் கூறவில்லை. இந்த யோசனைகளை ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் அரசியல் நெருக்கடி குழுவின் தலைமையை ஏற்றிருக்கும் மலிக் சமரவிக்கிரம - முதலில் ஏற்றுக்கொள்ள மறுத்தார். இதனையடுத்து, ரணிலின் அரசாங்கமும் தமது நிராகரிப்பை வெளியிட்டது. இதற்குப் பின்னர் ஜனாதிபதி - ஒரு கூட்டத்தில் உரையாற்றும்போது, எதிர்வரும் 15 ஆம் திகதி (டிசம்பர்) வரையிலும் மாத்திரமே இந்த அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான காலக்கெடுவாகத் தாம் தீர்மானித்திருப்பதாகவும், முடியாவிட்டால், அதன்பின்னர் மாற்று நடவடிக்கைகளுக்குச் செல்லப்போவதாகவும் அறிவித்தார். அதேநேரம், ஜனாதிபதி தமது நீண்டநாள் அரசியல் நோக்கம் எனக் கூறிவரும் - கூட்டமைப்புக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியுடனான சந்திப்பு ஒன்றை அவசரமாக அழைத்தார்.

எல்லோருமே இந்தச் சந்திப்பில், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் கூட்டமைப்புக்கான திகதி நிர்ணயிக்கப்படப்போகிறது என நினைத்துக்கொண்டிருந்தனர்.

ஆனால், அவ்வாறு எதுவுமே நடக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியுடனான தேசிய அரசு உறவை, ஜனாதிபதி தொடர்ந்தும் வலியுறுத்திவரும் நிலையின் உண்மைத்தன்மை குறித்து அறிந்துகொள்வதற்கு, மக்கள் விடுதலை முன்னணி விரும்பியது.

எனவே, அது ஜனாதிபதியிடம் அதற்கான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டதாகப் பின்னர் தெரியவந்தது. இதனையடுத்து, கூட்டமைப்பு சம்பந்தமாக மீண்டும் ஒரு பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணங்கிக்கொண்டன.

ஜனாதிபதி காலக்கெடுவை விதித்த அதே வேளை, மக்கள் விடுதலை முன்னணியுடன் பேச்சுவார்த்தை நடத்தியது, அரசியல் தரப்பில் பரபரப்பாக பேசப்பட்டது போலவே, பிரதம மந்திரியும் இந்த 15 ஆம் திகதி காலக்கெடுவை ஏற்றுக்கொண்டதற்கான கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில், பிரதம மந்திரி கருத்துரைக்கையில் - சமாதான முன்னெடுப்புக்கள் ஸ்தம்பித்திருக்கும் நிலையில், எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறை அரசியல் நெருக்கடிக்குத்தீர்வு எட்டப்படவேண்டும். இன்றேல், தேர்தலுக்குச் செல்லவேண்டிய அவசியம் அல்லது மாற்று நடவடிக்கைக்குச் செல்லவேண்டியநிலை ஏற்படும் என, அவர் அமைச்சரவையில் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி கூறிய காரணமும், காலக்கெடுவும் - அதேபோல பிரதமர் கூறிய காரணமும், காலக்கெடுவும் இருவருக்கும் மத்தியில் இன்னமும் எந்தவொரு இணக்கப்பாடுகளும் ஏற்படவில்லை என்பதையே சுட்டி நிற்கின்றன.

பிரதமர் தமது காலக்கெடு அறிவித்தலை விடுத்த அதேநேரம், அன்றைய அமைச்சரவையிலும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. சமாதான முயற்சிகள் ஜனாதிபதியினால் முன்னெடுத்துச் செல்லப்படுமானால், அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாக அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி பொறுப்பேற்ற அமைச்சுக்கள் மூன்றும், மீண்டும் தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலிலும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது இடம்பெற்ற அடுத்தநாள் - ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவிலிலிருந்து செய்திக் குறிப்பு ஒன்று வெளியிடப்பட்டது. அதில், ஐக்கிய தேசியக் கட்சி - 2001 ஆம் ஆண்டில் மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆதரவை, மீண்டுமொருமுறை உறுதி செய்துகொள்ள விருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயற்பாடுகளால், நாடு மீண்டும் யுத்தம் ஒன்றுக்குள் செல்லும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

சமாதான நகர்வுகள் திருப்தியின்மையால், டோக்கியோ மாநாட்டில் நிதியுதவி தருவதாக உறுதியளித்த நாடுகள் - தமது உதவியை மறுதலிக்கும் நிலைக்கு வந்துள்ளன. எனவே, 2001 ஆம் ஆண்டில் மக்கள் தமக்களித்த ஆதரவை - மீண்டும் பெற்றுக்கொள்வதே சிறந்ததாகும் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி சொல்வதைப் போல, விரைவில் தேர்தல் நடைபெறுமாக இருந்தால், அதில் ஐக்கிய தேசியக் கட்சி எத்தகைய வெற்றியைப்பெறும் என்பதைப் பார்ப்போம். ஜனாதிபதி- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் இருந்த மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற போது, அதன் தாக்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனுதாப அலைகளை வழங்கியிருந்தது.

ஆனால், இன்று அந்த அனுதாப அலையில் சற்றுத் தளர்வு காணப்படுகிறது. எனவே, இன்றைய நிலையில் தேர்தல் ஒன்று வருமாக இருந்தால், அது மீண்டும் இலங்கையில் தொங்கு நாடாளுமன்றத்துக்கே வழிவகுக்கும். ஆனால், எதிர்வரும் 15 ஆம் திகதி - காலக் கெடுவுக்குள் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்படாது, ஜனாதிபதியே நாடாளுமன்றத்தைக் கலைப்பாரானால், அது மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கூடிய வெற்றிவாய்ப்பு ஒன்றைப் பெறக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கும்.

இதற்கான ஒரு முனைப்பையே ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்துச் செல்கிறது. அந்த முனைப்பு வெற்றி பெறுவதற்கு, ஜனாதிபதி விட்டுக்கொடுப்பாரா என்பது, அடுத்து வரும் தொக்கிநிற்கும் கேள்வியாகும். இதனை முறியடிக்க ஜனாதிபதி, மற்றும் ஒரு முயற்சியையும் மேற்கொண்டார் என்ற செய்திகள்- தென்னிலங்கையின் சிங்கள ஊடகங்களில் வெளியாகியுள்ளன. இது உண்மையோ, பொய்யோ - ஆனால், ஜனாதிபதியின் இவ்வாறான முயற்சி ஒன்று, மலையக தொழிற்சங்கவாதி ஒருவரின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது என்பதை ஏற்கனவே 'நமது ஈழநாட்டில்', 'தெற்குத் திசையினிலே' பகுதியில் குறிப்பிட்டிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் இரண்டு முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் (இவர்கள் மக்கள் விடுதலை முன்னணியுடன் - சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டை எதிர்ப்பவர்கள்) தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புக் குறித்து, கொழும்பில் ஆராய்ந்திருந்தனர் என்பதை அன்று சுட்டிக்காட்டியிருந்தோம்.

## தெற்குத் திசையினிலே....

## கொழும்பிலிருந்து இந்திரஜித்

அந்த நகர்வின் மற்றும் ஒரு கட்டமாகவே, ஜனாதிபதி - தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முயற்சித்ததாக தற்சமயம் தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், இந்தத் தடவை குறிப்பிட்ட மலையக தொழிற்சங்கவாதி - இதில் சம்பந்தப்படவில்லை. அதற்கு மாறாக மற்றும் ஒரு தமிழர் பயன்படுத்தப்பட்டுள்ளார். அவரே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடதத வனனிக்கு அனுப்பப்பட்டார் என்றே தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதியின் எண்ணப்படி 2000 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட தீர்வு யோசனையை மையமாகக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 2000 ஆம் ஆண்டு தீர்வுயோசனையை மையமாகக்கொண்டு, சமாதான நகர்வை முன்னெடுக்க, மக்கள் விடுதலை முன்னணி இணக்கம் தெரிவித்தமையை இந்தக் கட்டுரைப் பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். தற்சமயம் இதனை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என ஜனாதிபதி எதிர்பார்க்கிறார்.

ஜனாதிபதியின் இந்த எதிர்பார்ப்பை, தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே, மீண்டும் ஜனாதிபதி சமாதான நகர்வைப் பொறுப்பேற்கும்நிலை காணப்படுகிறது. இல்லையேல், ஜனாதிபதியும், மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து தேர்தல் ஒன்றுக்கான கூட்டை ஏற்படுத்திக் கொள்ளவே ஆயத்தமாகவிருக்கிறார்.

அத்துடன், எதிர்வரும் மார்ச் மாதமளவில் தேர்தல் ஒன்றுக்குச் செல்லவும், அவர் ஏற்பாடுகளைச் செய்துவருகிறார். எது எப்படியோ எமக்குக் கிடைத்த தகவலின்படி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பில், லண்டனிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் ஒருவர் - ஜனாதிபதியின் தரப்பு ஒருவருடன் தொலைபேசியில் உரையாடியதாகவும், இதனடிப்படையிலேயே குறிப்பிட்ட ஜனாதிபதியின் பிரதிநிதி வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரியவந்திருக்கிறது.

எனினும், இந்தச் செய்தியை தமி ழீழ விடுதலைப் புலிகளின் தரப்பு உறுதிப் படுத்தும்வரை, அது ஒரு தகவலாகவே இருக்கப் போகிறது.

❖

# 2015 ஆண்டில் இந்தியா பிராந்திய வல்லரசாகும்!

## அமெரிக்க உளவுத்துறை அறிக்கை தெரிவிப்பு

2015 ஆம் ஆண்டில் இந்தியா பிராந்திய அளவிலும், பொருளாதாரரீதியிலும் வல்லரசாக மாறும் என்று அமெரிக்க உளவுத்துறை தெரிவித்தது.

அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உளவுப்பிரிவின் இயக்குனர் ஜார்ஜ்டெனட் தலைமையிலான அமெரிக்க தேசிய புலனாய்வுப் பணியகம் 2015 இல் உலகநாடுகளின் நிலை பற்றிய தனது 59 பக்க ஆய்வு அறிக்கையை அமெரிக்க அரசிடம் வழங்கியுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது,

இந்தியாவின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு 1.2 பில்லியனாக உயரும். தொழில்நுட்ப வளர்சியின் உதவியோடு பொருளாதாரத்தில் பெரும் வளர்ச்சி பெற்று, ஆசியப் பிராந்தியத்தில் தவிர்க்க முடியாத மாபெரும் வல்லரசாக இந்தியா உருவெடுக்கும்.

அதுமட்டுமல்லாமல், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்தை சமாளிக்க சீனா, ரஷ்யா, இந்தியா இடையே புதிய கூட்டணி உருவாகும். இதை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் சமாளிக்க புதிய வழிமுறைகளைக் கையாளவேண்டிவரும்.

கல்வித்துறையில் இந்தியா பலம் வாய்ந்து விளங்கும் அதே நேரத்தில், ஜனநாயக ஸ்திரத்தன்மையும் உள்ளது. மேலும் ஆங்கில அறிவும் நிறைந்திருப்பதால் தகவல் தொழில்நுட்பத்துறையில் சர்வதேச அளவில் இந்தியா மேலும் வளரும். இந்தத் துறையில் வளரும் நாடுகளில் இந்தியா தொடர்ந்து முதலிடத்திலேயே இருக்கும்.

பணக்காரர்கள் தொடர்ந்தும் பெரும் பணக்காரர்களாக மாறுவது, ஏழை தொடர்ந்து பரம ஏழையாக மாறுவது போன்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைவதிலும், உலகமயமாக்கலின் காரணமாக விளைகின்ற எதிர்மறை விளைவுகளைக் களைவதிலும், நிர்வாக சீர்கேடுகளைக் களைவதிலும் இந்தியா எந்த அளவிற்கு செயல்படுகின்றது என்பதைப் பொறுத்தே வல்லரசை நோக்கிய அதன் பாதை இருக்கும்.

குறிப்பாக இந்தியாவின் வட மாநிலங்களில் வளர்ச்சியை ஏற்படுத்துவது அந்த நாட்டுக்கு பெரும் சவாலாக இருக்கும்.

அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் போர் மூளுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரிக்கும். இரு நாடுகளும் தொடர்ந்து அணு ஆயுதங்களையும், ஏவுகணைகளையும் உற்பத்தி செய்வது அதிகரிக்கும்.

போர் குறித்த அச்சம் பிராந்திய அளவில் மற்ற நாடுகளின் அரசியல் நிலைப்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தும். காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளின் அத்துமீறல் நடவடிக்கைகள் காரணமாக இந்தியா தனது ஆயுதபலத்தை பெருக்கிக் கொள்ளவும், அத்துமீறலுக்கு எதிராக கடுமையான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முயலும்.

இந்தியாவுக்குப் போட்டியாக பாகிஸ்தானும் தனது அணுவாயுத பலத்தை பல மடங்கு அதிகரிக்கும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஆப்கான் – கந்தகார் நகரில் குண்டுவெடிப்பில் பலர் காயம்!

ஆப்கானிஸ்தானின் தெற்கு நகரான கந்தகாரில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில், பல பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குண்டு வெடித்த இடம் வர்த்தக நகரமெனவும்,இங்கு பெரிய ஹோட்டல்கள் மற்றும் சந்தைகள் என்பன உள்ளதாகவும், இவற்றை பெரும்பாலான வெளிநாட்டவர்களே பாவிப்பதாக தெரிவித்த பொலிஸார் குண்டு வெடிப்பில் படுகாயமடைந்தவர்கள் அனைவரும் ஆப்கான் பொது மக்கள் எனவும் தெரிவித்தனர்.

இந்த குண்டுத்தாக்குதலில் எவரும் உயிர் இழக்கவில்லையெனத் தெரிவித்த பொலிஸார், சைக்கிள் ஒன்றில் வந்தவராலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்தனர்.

இந்தக் குண்டு வெடித்த கந்தகார் நகரம், தலிபான் போராளிகளின் வலுவான இடமாக முன்னர் இருந்த போதிலும், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமெரிக்கத்துருப்பினரின் தாக்குதலால் அவர்கள் அங்கிருந்து அகற்றப்பட்டதும் குறிப்பிடத்டதக்கது.

இதேவேளை, கடந்த புதன்கிழமை இப்பகுதியில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் அமெரிக்கப்படைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதனிடையே கடந்த ஒருமாதகாலத்திற்கு முன்னர், இப்பகுதியிலுள்ள ஐ.நா.அலுவலகத்துக்கு முன்னால் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் ஒருவருக்கும் காயமேற்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தவார முற்பகுதியில் ஆப்கானுக்கு விஜயம் செய்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாயை சந்தித்த பின் கருத்து தெரிவிக்கையில்,தலிபான் தீவிரவாதிகள் இனி ஒருபோதும் இந்த நாட்டில் ஆட்சிக்கு திரும்ப முடியாது.அதற்கான எந்த ஒரு வாய்ப்பும் அவர்களுக்கு இல்லை யெனவும் தெரிவித்தனர்.

## உலக நோக்கு

# 52 தமிழக மீனவர்கள் ராமேஸ்வரம் திரும்பினர்

இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட தமிழக மீனவர்களில் 52 பேர் மண்டபம் திரும்பினர். 13 பேர் தொடர்ந்து சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

சமீபத்தில் இலங்கை கடற்படையினரால் ராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டையைச் சேர்ந்த மீனவர்கள் 60 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 52 பேரை விடுவிக்க நீதிமன்றம் உத்தர விட்டது.

இதையடுத்து 52 மீனவர்கள் நேற்று முன்தினம் மாலை மண்டபம் சென்றடைந்தனர்.

இவர்களுடன் படகுகளும் திரும்பி சென்றுள்ளன. இருப்பினும் இன்னும் 13 மீனவர்கள் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் படகுகளை ஓட்டி வந்ததாக, இலங்கை கடற்படை குற்றம் சாட்டியுள்ளது.

இதற்கிடையில், தமிழக மீனவர்கள் நலனில் அக்கறை காட்டாத மத்திய அரசைக் கண்டித்து, நேற்று நடத்துவதாக இருந்த ரயில் மறியல் போராட்டத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு தமிழக, புதுவை மீனவர்கள் நல கூட்டமைப்பு ஒத்திவைத்துள்ளது.

இம் மறியலைத் தொடர்ந்து தொடர் போராட்டங்களையும் நடத்த மீனவர் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

# பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் ரஷ்யாவை அடிபணியவைக்க முடியாது

## ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவிப்பு

(மொஸ்கோ)

பயங்கரவாதத் தாக்குதல்கள் மூலம் ரஷ்யாவை அடிபணிய வைக்க முடியாது என்று - ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.

தெற்கு ரஷ்யாவில் நேற்று முன்தினம் ரயிலில் நடந்த குண்டுத்தாக்குதலில் 42 பேர் உயிரிழந்து சுமார் 200 பேர் காயமுற்ற சம்பவத்தையடுத்தே, ரஷ்ய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் குண்டுவெடிப்பு சம்பவத்தில் பாடசாலை வகுப்புக்களுக்குச் ரயில் வண்டியில் சென்று கொண்டிருந்த மாணவர்களே அதிகம் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.






இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து - இன்று நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி ரஷ்யாவின் பல பகுதிகளிலும் பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

குண்டுத்தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட ரஷ்ய அமைச்சர் ஒருவர் இந்தத் தாக்குதலின் பின்னணியில் செச்சினியத் தீவிரவாதிகள் இருக்கலாம் என்று தான் சந்தேகம் கொள்வதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் குறித்து செய்தி வெளியிட்டுள்ள செச்சினிய பிரிவினைவாதிகளின் இணையத்தளத்தால் மக்களுக்கு எதிரான எந்தவொரு பயங்கரவாத நடவடிக்கைகளையும் தாம் கண்டிப்பதாக தெரிவித்துள்ளது.

# அமெரிக்க பாதுகாப்பு செயலர் ஈராக்கிற்கு திடீர் விஜயம்!

அமெரிக்க பாதுகாப்பு செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஈராக்கிற்கான விஜயமொன்றை நேற்று திடீரென மேற்கொண்டுள்ளார்.

முன்கூட்டியே திட்டமிடப்படாதிருந்த நிலையில் நேற்று அதிகாலை கடும் பாதுகாப்புக்கு மத்தியில் ஈராக்கின் கிர்குக் பகுதிக்கு இவர் சென்றமை பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஈராக்கிற்கு சென்ற ரம்ஸ்பீல்ட் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் - இந்த விஜயத்தின்போது, ஈராக்கின் தற்போதைய அரசியல் இராணுவ நிலைமைகளை மதிப்பிடக்கூடியதாக உள்ளதெனத் தெரிவித்தார்.

அத்துடன் ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாக அதிகாரியான போல் பேமரையும் ரம்ஸ்பீல்ட் சந்திக்கவுள்ளார். ஆனால், இந்த நேரத்தில் சதாம் ஆதரவுப் படையினரால் கடும் தாக்குதல்கள் ஏதாவது நடக்கலாமெனவும் போல் பேமர் ரம்ஸ்பீல்டை எச்சரித்துள்ளார்.

அதிகாலைவேளை வந்திறங்கிய ரம்ஸ்பீல்ட் கிர்குக் பகுதியில் உள்ள அமெரிக்க இராணுவத்தினருடன் தனது காலை உணவை அருந்தியுள்ளார்.

ரம்ஸ்பீல்ட் ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரிகளையும் ஈராக்கிய உள்ளூர் தலைவர்களையும் சந்தித்துள்ளார்.

# பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினரின் அலுவலகம் மீது குண்டு வீச்சு

தமிழகம் நாகை மாவட்டம் மயிலாடுதுறை பா.ஜ.க.சட்டமன்ற உறுப்பினர் ஜெயவீரபாண்டியனின் அலுவலகத்தின் மீது நேற்று அடையாளம் தெரியாத சிலர் குண்டுவீசித் தாக்குதல் நடத்தினர் .இதில் அந்தக் கொட்டகை தீப்பிடித்துக் கொண்டது.தீயணைப்புப்படையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர்.

பாபர் மசூதி இடிப்பு தினத்தையொட்டி மயிலாடுதுறையில், கண்டணப்பேரணி நடத்த தமிழக முஸ்லிம் முன்னேற்றக்கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

அதேசமயம், இந்த தினத்தை இந்து எழுச்சி நாளாக அனுசரிக்கப் போவதாக பாரதிய ஜனதாக் கட்சி மற்றும் வி.எச்.பி.ஆகியவை கூறியிருந்தன.இதனால், மயிலாடுதுறையில் பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று அதிகாலை மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ஜெகவீர பாண்டியனின் அலுவலகத்தின் மீது நாட்டுக்குண்டுகள் வீசப்பட்டன. அடையாளம் தெரியாத சிலர் குண்டுகளை வீசிவிட்டுத் தப்பியோடிவிட்டனர்.

இதில் அலுவலகக் கொட்டகை தீப்பிடித்துக் கொண்டதும்,உடனடியாக தீயணைப்புப் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதும் அவர்கள் விரைந்து சென்று தீயை அணைத்தனர்.

YOGI HOME SCIENCE ACADEMY
வழங்கும்
பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 2 நாட்கள் மட்டும்.
1. நான்கு கேக் கலவைகள் 13.12.2003 காலை 10.00 மணிமுதல் 2 மணிவரை.
1.Rich cake.
2.Dates cake.
3. Light fruit cake.
4.Marble cake.
2. ஐந்து Pudding வகைகள், 13.12.2003 3 p.m முதல் 5 p.m வரை
1.Caramal pudding
2.Cake pineapple pudding
3.Ribbon pudding
4. Biscuit pudding
5. Chocolate Icecream
3. ஐந்து வகை Short Eats வகைகள் 14.12.2003 காலை 10.30 மணிமுதல் 1மணிவரை பின் 2 P.m -4 P.m வரை
1. Pizza.
2. Nippon Rolls.
3. Samosa.
4. Date Surprise.
5. Puff short Eats.
சேர விரும்புவோர் உடன்தொடர்பு கொள்ளவும்.
T.p: 2222796
(547)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ்மக்களின் உரிமையை பாதுகாப்பதற்கு பேச்சுக்களின் மூலம் தீர்வுகாணவேண்டும்!

## இந்தியாவின் நிலைப்பாடு இதுவே என்கிறார் ராஜ்கோத்ரா

(கொழும்பு)

இலங்கையில் வாழும் தமிழ்மக்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காக ஜனநாயகக் கட்டமைப்புக்குள் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படவேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது.

இவ்வாறு புதுடெல்லியைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் வியூகங்களுக்கும் சர்வதேச ஆய்வுகளுக்குமான மையத்தின் தலைவர் எம்.கோ.ராஜ்கோத்ரா தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற இந்திய - இலங்கையின் முதலாவது வியூகங்களுக்கான கருத்துப் பரிமாற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை சிலர் தவறாகக் கருதுகின்றனர். இந்திய அமைதிப்படையினர் அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் அழைப்பை ஏற்றே இங்கு வந்தனர். இவ்வாறான அழைப்பு இந்திய அரசாங்கத்துக்கு விடுக்கப்படாவிட்டால் அமைதிப்படையினர் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கையில் காலடி எடுத்துவைத்திருக்க மாட்டார்கள்.

வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து இந்திராகாந்தி ஆட்சி செய்த காலம் முதல் இந்தியா தெளிவான கொள்கையையே கடைப்பிடித்து வருகின்றது.

இலங்கையின் இறைமையைப் பாதுகாக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு உட்பட பல விடயங்களில் கூட்டுச்செயற்பாடு இருக்க வேண்டியது அத்தியாவசியமானது.

குறிப்பாக இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காக உரியதரப்பினர் ஜனநாயகக் கட்டமைப்புக்குள் மேற்கொண்டுவருகின்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாற்சந்தி

'சீ... கண்டறியாத மழை... சிணுங்கிச் சிணுங்கி பெய்து கொண்டிருக்கு... ஒரு வேலையும் செய்ய முடியாதிருக்கு... வெய்யிலும் வாறதும் போறதுமாய் இருக்கு... சந்தி சேறும் சகதியுமாகக் கிடக்கு, வீதியும் இந்த மழையோடு குண்டும் குழியுமாகப் போட்டுது...' என்றார் கனகர்.

'இது மழையின்ர காலம்தானே... தன்ரை வேலையை அது செய்யுது... அதுக்கேன் நீ புறுபுறுக்கிறாய்... மாரி வரும் முன்பே... அதற்கான ஏற்பாடுகளை மாநகரசபையோ... எந்தச் சபையோ செய்யிறேல்லை... பிறகு மழையைப் பேசி என்னபிரியோசனம்...'- என்றார் மணியம்.

'மழை தன்ரை கடமையைச் செய்யுது மனிசன் தன்ரை கடமையைச் சரியாய் சேய்யேல்லை என்கிறாய் அப்படித்தானே...'என்றார் கனகர்.

'வீதிகளிலை கழிவுகளை வீசுகினம். குப்பையைக் கொட்டுகினம், எச்சில் துப்பினம்... இதெல்லாம் பகுத்தறிவுள்ள மனிசர் செய்யிற வேலையே... மனிசர் நடமாடுற றோட்டு என்று எவராவது நினைக்கினமே...?'- இது மணியம்.

'றோட்டாலை போற வாகன ஓட்டிகள் தங்களுக்கென்றே றோட்டுப் போட்டதாக நினைக்கினம்... பக்கத்தாலை போகிற பாதசாரிகளை மதிப்பதே இல்லை... வாகனத்திலை ஏறினா விமானத்தில பறக்கிறதா நினைப்பு...'இது கனகர்.

'சரி.... இதுக்கு நாங்கள் ரெண்டு பேரும்புலம்பி என்ன செய்யிறது.'

'புலம்பாமலும் இருக்க முடியுமே... பார் ரெண்டு பேற்ற வேட்டியையும் சேற்றிலை தோய்த்த மாதிரியெல்லே கிடக்குது...'

'நீ ஒன்று, இந்தக் கண்கெடுவான்கள் சேறடிப்பாங்கள் என்று தெரிந்துதான், தோட்டவேலைக்கு கட்டுற ஊத்தை வேட்டியை கட்டிக்கொண்டு வந்தன்...நீ...வெள்ளை வேட்டி கட்டி வந்து சேற்றுப்பூசை வாங்கினதுக்கு நானே பொறுப்பு' என்று சிரித்தார் மணியம்.

-தெருவாசி

# 'விழுதாகி வேருமாகி' நூல் அறிமுகவிழா நேற்று நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது!

(யாழ்ப்பாணம்)

வானதி வெளியீட்டகத்தினால் மாலதி படையணியின் 'விழுதாகி வேருமாகி' நூல் அறிமுகவிழா நேற்று மாலை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பொதுச் சுடரினை ஊரகக் கிளைச் செயலாளர் ஜீவரட்ணம் ஏற்றினார். தேசியக் கொடியை மாலதி படையணியின் தளபதி தமிழ்ச் செல்வி ஏற்றினார்.

நூலின் அறிமுக உரையினை இந்த நூலை எழுதியவர்களில் ஒருவரான புரட்சிகா ஆற்றினார்.

முதல் பிரதியை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்விழியிடமிருந்து மேஜர் பாரதியின் தாய் அன்னம்மா பெற்றுக்கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. நல்லூர் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சிறப்புப் பிரதிகளை வழங்கினார்.

நூலுக்கான மதிப்பீட்டு உரைகளை யாழ். பல்கலைக்கழகத்தை சேர்ந்த அருளானந்தம் மற்றும் விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் ஆற்றினர்.

# மீளக்குடியமரும் பொதுமக்கள் மீது மட்டக்களப்பில் படையினர் கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் மீளக்குடியேறிய தமிழ்மக்கள் மீது இராணுவத்தின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேற்றக் கிராமங்களுக்கான மயிலந்தனை, சாளம்பைச்சேனை, வாகனேரி ஆகிய கிராமங்களுக்கு இராணுவத்தினர் அடிக்கடி சென்று மீள்குடியேறியவர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர் விபரங்களை சேகரித்து வருகின்றனர். அத்துடன் புதிதாக யார் வந்தாலும் தமது முகாமுக்கு அறிவிக்கவேண்டுமென உத்தரவிட்டிருப்பதாகவும் அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மயிலந்தனை கிராமத்தில் 1992 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 09 அம் திகதி இராணுவத்தினரால் 35 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதையடுத்து அங்கிருந்து வெளியேறிய மக்கள் வாழைச்சேனையில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அகதிகளாக இருந்தனர். இவர்கள் அண்மையில்தான் தமது சொந்தக் கிராமங்களுக்குச் சென்று மீள்குடியேறியுள்ளனர்.

இந்த நிலையில், 1992 ஆம் ஆண்டு நேர்ந்த அனர்த்தம் போல மீண்டும் ஏற்படுமோ என மக்கள் அஞ்சுகின்றனர். இதேபோன்று 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கோரளைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கறுப்பளை, முத்துக்கல், அடியார்மடு, வடமுனை, ஊத்துச்சேனை ஆகிய கிராமங்களில் குடியிருந்த நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் இராணுவத்தினராலும், ஊர்காவற்படையினராலும் படுகொலை செய்யப்பட்டனர். அதனையடுத்து அந்தக் கிராமமக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து கடந்த 13 வருடங்களாக வாழைச்சேனை பகுதியில் அகதிகளாக இருந்தனர். அவர்களும் சமாதான சூழலை அடுத்து தமது கிராமங்களுக்கு சென்றபோது அங்கு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

1960 ஆம் ஆண்டு தங்களுக்கு வழங்கப்பட்ட காணி உறுதிப்பத்திரம் தங்களிடம் இருப்பதாக தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் சிங்களக் குடியேற்றவாசிகளினதும் ஊர்காவற்படையினரதும் அச்சுறுத்தல்கள் இருப்பதாலும் தாங்கள் சொந்த இடங்களில் வாழமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அக்கிராம மக்கள் மேலும் தெரிவித்தனர்.(01)

### இந்தியா பங்களிப்பு...

டிருந்ததாலேயே பேச்சுக்களை ஆரம்பித்தோம். ஆனால், சந்திரிகாவின் நடவடிக்கையால் ரணில் அரசாங்கம் பாதுகாப்பு, உள்துறை போன்ற அதிகாரமிக்க அமைச்சுக்களை இழந்துபோய் நிற்கின்றது.

இந்த நெருக்கடியான நிலையில் யாரிடம் அதிகாரம் உள்ளது என்று தெரியாதுள்ளது. இந்த நிலைமை குறித்து தலைவர் பிரபாகரனது மாவீரர் நாள் உரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

மாவீரர் நாளையொட்டி தமிழீழ தேசியத் தலைவர் ஆற்றிய உரை குறித்து இந்தக் கூட்டத்தில் விளக்கமாக விபரித்த கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் உரை - சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. லண்டன் மாவீரர் நாள் நிகழ்வு இடம் பெற்ற மண்டபத்தில் 12 ஆயிரம் இருக்கைகள் போடப்பட்டிருந்த போதும், இருக்கை வசதியின்றி ஏராளமானோர் கூடி நின்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### அரசியல்.....

இந்தியா உட்பட அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளின் உயர்மட்டத் தலைவர்களே இவ்வாறு அழுத்தத்தைப் பிரயோகித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச சமூகம் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க மிகவும் ஆவலாக உள்ளது. எனவே இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தற்போதைய....

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எதிர்வரும் பதினைந்தாம் திகதி பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறவுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக அமையும்.

இந்தச் சந்திப்பின்போது இருவருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைக்கு முற்றுப்புள்ளி ஏற்படும் உடன்பாடுகள் காணப்படுகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தையை பூர்த்தி செய்வதற்கு காலஅவகாசம் ஒன்றும் அவசியமானது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு இருதரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் எனவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (01)

### துப்பாக்கிச்சூட்டுக்கு...

நின்ற படையினருக்கு மதிய உணவினை வழங்கிவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கையிலேயே மேற்படி சிப்பாய் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

கையில் படுகாயமடைந்த இவர், தற்போது மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.. இது தொடர்பாக இராணுவத்தினரும் பொலிஸாரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்ற இடம் முஸ்லிம்களின் கிராமம் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆனந்தசங்கரியின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. ஏற்கனவே 14 ஆம் திகதி இக்கூட்டத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்குழு உறுப்பினர்களுக்கு 14 நாள் கால அவகாசம் வழங்குமுகமாக 21 ஆம் திகதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அன்றையதினம் ஆனந்தசங்கரி மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு முரணான வகையில் நடந்துகொண்டமை, தமிழ்க்கூட்டமைப்புடன் இணைந்து செயற்படாமை, விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்கத் தவறியமை, சமாதானப் பேச்சுவார்த்தைகளை பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் ஆனந்த சங்கரி மீது சுமத்தப்படவிருக்கின்றன. (01)

# எதிரிமட்டும் அறிந்ததை...

வுகளை புரிந்துகொள்கின்ற தன்மையும் அவசியம். இல்லாது போனால் எமது போராட்டத்தின் வரலாற்றை அதன் ஆழத்திலும் அகலத்திலும் அதன் யதார்த்தக் கோலத்திலும் தரிசித்துக்கொள்வது கடினம்.

போர் பற்றிய அறிவு, ஞானம் இல்லாத பழமையில் புதைந்து போன வரலாற்றாசிரியர்களால் எமது பெண் போராளிகளது வரலாற்றை துல்லியமாகக் கிரகித்தறிவது சிரமம்.

எனவே போர்க்களத்தில் அளப்பெரும் தியாகங்களையும். சாதனைகளையும் படைத்த பெண்போராளிகளே இப்பணியையும் மேற்கொள்ள வேண்டும் என்பது நீண்டநாளாக என்னிடம் இருந்த பேரவா. எனது பேரவாவுக்கு விருந்தளிக்கும் மாலதி படையணியின் வெளியீடாக நெஞ்சையுறைய வைக்கும் பல்வேறு சமர்களின் தொகுப்பாக பெண்போராளிகளது வீரத்தையும் விவேகத்தையும் பறைசாற்றும் வரலாற்றுப் பதிவேடாக இந்நூல் வெளிவருவது பெரும் மகிழ்வைத்தருகிறது.

உலகிலே சரிபாதியினர் பெண்கள். எமது சமூகத்திலே சரிபாதியினர் பெண்கள். இந்தச் சரிபாதித் தொகையினரான பெண்கள் எமது போராட்டத்திற் பங்குபெறாது எமது தேசத்தின் விடுதலை சாத்தியப்படாது. சரிபாதியினரான பெண்களுக்கு விடுதலையின்றி எமது தேச விடுதலையும் முழுமைபெறாது.

ஆனால், அன்று எமது சமூகத்தில் பெண்களுக்கெதிரான சமூக அநீதிகள் அதிகரித்திருந்தன. பெண் அடக்குமுறைக் கருத்துக்கள் பலமாக நிலவின. எமது சமூகமே சாதி, சமய வேறுபாடுகளால் ஆழமாகப் பிளவுபட்டு நின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக, நிலச்சுவாந்தர் முறைமையும் சாதியக் கட்டமைப்புக்களையும் இறுக்கமாகப் பின்னிப் பிணைந்து அமைந்த பொருளாதார உற்பத்தி முறையில், எமது சமூகக் கட்டமைப்பு எழுப்பப்பட்டிருந்தது. அது சுயசிந்தனைக்கு வரம்புகளை விதித்தது. பெண்கள், தாம் அடக்குமுறைக்குள் வாழ்கின்றோம் என்பதை உணரவிடாது தடுத்தது. அத்தோடு எதிரியின் இன அழிப்புப் போர் எம்மண்ணில் என்றுமில்லாதவாறு தீவிரமடைந்திருந்தது. அந்நிலையில் அடிப்படையான சமூக மாற்றத்தை ஏற்படுத்திப் பெண் விடுதலைக்கு வழிசமைப்பது பற்றி நாம் சிந்திக்க முடியாதிருந்தது.

எனவே, எமது விடுதலைப் போராட்டத்திற் பெண்களையும் அணிசேர்ப்பதனூடாக படிப்படியாக சமூக மாற்றத்தை ஏற்படுத்தி, பெண் விடுதலையையும் தேச விடுதலையையும் சாத்தியமாக்கலாம் என நான் உறுதியாக நம்பினேன். இவ்வாறுதான் எமது போராட்டத்திற் பெண்புலிகள் தோற்றம் பெற்று, இன்று எதிரியின் படைபலத்தைச் சிதைத்து, யுத்தத்தின் போக்கையே நிர்ணயிக்கின்ற பெரும் படையணிகளாக எழுந்து நிற்கின்றார்கள்.

ஒரு நூற்றாண்டுக்கு மேலாக மேற்குலகப் பெண்கள் பெரும் போராட்டங்களை நிகழ்த்தி, புரட்சிகளை நடத்தி விவாதங்கள் புரிந்து கருத்தமர்வுகளை மேற்கொண்டு பெற்றெடுத்தவற்றையும் விட எமது பெண்புலிகள் மிகவும் குறுகிய காலத்துக்குள் எமது பெண்களுக்கு பெற்றுக்கொடுத்த உரிமைகளும் சுதந்திரங்களும் அளப்பரியவை. அத்தோடு சமூகத்திலே பெரும் புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றார்கள். சமூக கருத்துலகின் புதிய பார்வையை வளர்த்து வருகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஆணும் பெண்ணும் சமமான ஆற்றலுடனேயே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உடற்கூற்றியல் நிபுணர்களின் கூற்றுக்கு பெண்புலிகளே உலகுக்கு உதாரணமாக வாழ்கின்றார்கள்.

புரட்சிப் புலிகளாகக் களமிறங்கியுள்ள எமது பெண்புலிகள் எத்தகைய துன்பங்களையுஞ் சுமந்து, எத்தகைய நெருக்கடிகளையுஞ் சமாளித்து, எத்தகைய ஆபத்துக்களையும் எதிர்கொண்டு போராடுகிறார்கள். அசைக்கமுடியாத மனவுறுதியும் அதனாற்பிறக்கும் துணிவும் அவர்களிடம் உள்ளன. அபாரமான சகிப்புத்தன்மையும் தளராத உறுதியையும் கடும் உழைப்பையும் கொண்டவர்கள் அவர்கள். தரையில் மட்டுமல்லாது கடலிலும் சண்டை செய்கிறார்கள். கடற்போர்க்கலை மிகவும் நுட்பமானது. அதற்கு நிறையப்பயிற்சியும் அனுபவமும் தேவை. கடல் சதா அசைந்து கொண்டிருக்கும். அதன் முதுகில் சவாரிசெய்து கொண்டு, சண்டையிடுவது மிகவும் கடினமானது. எமது பெண்புலிகள் மீன்குஞ்சுகள் போலக் கடலோடு வாழப்பழகிவிட்டார்கள்.

இந்தப் பெண் போராளிகளை, அவர்களது போராட்ட வாழ்க்கையை, அவர்களிடையே நிலவும் ஆழமான புரிந்துணர்வை, அளவிட முடியாத அன்புறவை இந்நூல் அழகு தமிழில் எளிய நடையில் மிக நுட்பமாக வெளிப்படுத்தப்படுகிறது. பல்வேறு இடங்களில் நடந்த பல்வேறு சம்பவங்களுக்கூடாக மாலதி படையணியின் வரலாறு சொல்லப்படும் பாங்கு சிறப்பாக அமைகிறது. மேலும் பெண்புலிகளது போரனுபவத்தை மாலதி படையணியின் சண்டையனுபவத்துடன் பின்னிப் பிணைத்து, பெண்புலிகளது வரலாறு இந்நூலில் அழகாகப் படைக்கப்பட்டிருக்கிறது.

இந்நூலின் ஆக்கத்துக்கு அயராது உழைத்த மாலதிபடையணிப் போராளிகளுக்கும் தளபதிகளுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு, இந்நூல் சிறப்புடன் வெளிவர எனது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.